விலை ரூபா 10/-

# குன்றின் குரல்

ஆண்டு 11 ஜூன் 92 இதழ் 2

"மக்கள் தனது பலத்தைப் பிரித்து குட்டிச் சங்கங்களில் சேர்ந்து கொண்டிராமல் ஒரே சங்கத்தில் உறுதிப்பாட்டுடன் நின்றால் காங்கிரஸ் அவர்களின் வருங்காலத்தை உறுதிப் படுத்த முடியும்.

-- திரு. எஸ். தொண்டமான்

தோட்டத்துறை, தனியார் மயம், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆகிய இரு சர்வதேச நிதி நிறுவனங்களினால் வலியுறுத்தப்பட்டது. அரசு அந்த சிபாரிசை அமுலாக்க நடவடிக்கைகளை அறிமுகப் படுததியுள்ளது.

-- திரு. எஸ். நடேசன்

அரசு சட்டத்தை மீறி நடக்கும் நிர்வாகத்தை அறிமுகப்படுத்த விழைக்கின்றது. இதனாலேயே தனியார் மயத்தின் பின்னர் தொழிலாளர் உரிமைகள் பாதிக்கப்படும் என நாம் அஞ்சுகின்றோம்.

-- கலாநிதி விக்கிரமபாகு

## எழுபத்தேழின் விடிவெள்ளி

சங்கங்களுக்காக
செத்தது போதும் - இனி
எங்களுக்காய்
சாவோமென எழுதப்பட்ட
முதல் அத்தியாயம்
சிவனு லெட்சுமணன்

தேர்தல் தேரோட்டத்துக்கு
நாம் வதியும்
ஏழாயிரம் ஏக்கரா
பாதையாக வேண்டுமென
பதறினான் - இந்தப்
பாதகத்துக்கு
கொடுக்கும் இடம்
தானை
நம் கோவணத்திலும்
கொடியவர்களின்
குடியிருப்புக்கு
குடைபிடிக்குமென
அன்றே
உணர்ந்தவன்
மலையக மக்களின்
மனவெளிகள் தோறும்

நிறைந்து - அந்த
டெவன் நீர்வீழ்ச்சியில்
வீரச்சாவின் வெடிலோசை
இன்றும் எதிரொலிக்க
இறந்துபோன
லெட்சுமணன்
எழுபத்தேழின்
விடிவெள்ளி.

க. முரளிதரன்
(தீவகத்துக்கு ஊமைகள் என்ற நூலிலிருந்து)

# குன்றின் குரல்

ஆண்டு 11

இதழ் 2

ஜூன் '92



ஆசிரியர்-

அந்தனிஜீவா

ஆசிரியர் குழு-

வண. மரிய அந்தனி

திருமதி வசந்தி சிவசாமி

செல்வி மேனகா பீ. ஏ.

இரா. அ. இராமன்

இணை ஆசிரியர்-

ஜே. ஜேஸ்கொடி

பொறுப்பாசிரியர்-

பெ. முத்துலிங்கம்

வெளியீடு-

தோட்டப் பிரதேசங்களுக்கான

கூட்டுச் செயலகம்

முகவரி-

குன்றின் குரல்

30, புஸ்பதான மாவத்த,

கண்டி.


# இளைஞர்களிடையே விழிப்புணர்வு !

மலையக இளைஞர்களிடையே ஓர் அபரிமிதமான விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. மலையக இளைஞர்கள் தங்கள் சமூகத்தைப் பற்றிச் சிந்திக்க தொடங்கிவிட்டார்கள். கல்வியால்தான் தங்கள் சமூகத்தின் கண்களைத் திறக்க முடியும் என்ற நம்பிக்கை அவர்களிடையே தலைதூக்கி வருகிறது.

அத்துடன் தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்த தலைவர்களையும் தியாகிகளையும் நினைவு கூர முனைந்துவிட்டார்கள். அதன் முதல் வெளிப்பாடுதான் மலையகத்தில் மண்ணுக்காக தன்னுயிரை அர்ப்பணித்த தியாகி சிவனு லெட்சுமணனை சில இளைஞர்கள் நினைவு கூர்ந்தது .

அந்த தியாகி லெட்சுமணன் சுடப்பட்டு மறைந்த இடத்திற்குச் சென்று அங்கு அஞ்சலிக் கூட்டம் நடத்தியுள்ளனர். புதிய தலைமுறையினரிடையே புத்துயிர் பெற்று வரும் விழிப்புணர்வுக்கு இது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இதுபோன்று இன்னொரு சம்பவத்தையும் எடுத்துக் காட்டவேண்டும். உயர்கல்வி கற்கும் மாணவர்கள் தங்களின் முன்னோடிகளையும் மறைந்த தியாகிகளின் விவரங்களையும் தேடிச் சென்று சேகரித்துள்ளனர்

'இனி ஒரு விதி செய்வோம்' என்ற மகாகவி பாரதியாரின் வாக்கு நமக்கு நினைவுக்கு வருகிறது. இளைஞர்களிடையே மலர்ந்துவரும் இந்த விழிப்புணர்வு நமது சமூகத்திற்கு ஒளிமயமானதாக அமையட்டும்

தியாகத்தீயில் புடமிட்டு ஒளிர்ந்த தன்னலமற்ற தலைவர்களின் உண்மை வரலாறும் அடிமை விலங்கொடிக்க மலையக மக்களுக்காகத் தனதின்னுயிரை அர்ப்பணித்த செம்மல்களின் தியாக வரலாறும் வெளியாகும் போது, தங்களின் போலித் தலைமைத்துவ வாழ்க்கை சந்திக்கு வந்து விடுமே என்ற பயப்பிராந்தியில் இளைஞர்களின் செயற்பாட்டுக்கு ஆப்பு வைக்கமுனையலாம்; பட்டம் பதவிகளைக் காட்டி முளையிலேயே கிள்ளியெறியலாம்; ஆசை வார்த்தை கொடுத்து திசை திருப்பலாம். ஏமாற்றுத் தலைவர்களின் மாய்மால வாக்குறுதிக்குள் வசப்பட்டுவிடாமல் 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' யாக முன்னெடுத்துசெல்லுங்கள்

ஆசிரியர்

# ஒரு நிமிஷம் ஒரே பார்வையில்

பொதுவாக் மலையகம் எனக் கூறும்போது, சுமார் 150 வருட கால வரலாற்றைக்கொண்ட மக்கள் பிரிவினர் என்றே கணிக்கப்படுகின்றது. ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில், மலையகத் தமிழர் குறுகிய வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும், அக்குறுகிய காலக் கட்டத்திற்குள் பல்வேறு மாற்றங்களையும் அனுபவங்களையும் கொண்டுள்ளதுடன் இவ்வனுவங்கள் ஏனைய மக்கள் பெற்றுள்ள அனுபவங்க்ளை விட வேறுபட்டவையாகும்:

1948 களின் பின் எந்த நாடு நமது நாடு எனும் கேள்விக் குறியுடன் வாழ்ந்த இம்மக்களில் சிறு பகுதியினர், 1964-ல் கொண்டுவரப்பட்ட சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்துடன் இந்தியாவை தாயகமாக நினைத்துக்கொண்டு இந்தியா சென்றனர். பெரும் பகுதியினர் தாம் பிறந்த மலையகத்தை தம் சொந்த மண்ணாக்க் கருதி இலங்கையைத் தாயகமாகக் கருதினர்.

ஆனால் உணர்வுபூர்வமாக தாம் பிறந்த நாட்டைத் தாயக்மாகக் கொண்டபோதிலும், அவர்கள் இரண்டாம் பிரஜையாகவே ஆளும் வர்க்கத்தினால் கருதப்படுகின்றமையை அவர்களுக்கு அளித்துவரும் சலுகைக்கள்மூலம் நன்கு அடையாளம் காணமுடிகின்றது. தமது வாழ்விடமும் தொழிலும் இரண்டற பிணைக்கப்பட்டிருப்பதனால் தொழிற்துறையில் ஏற்படும் மாற்றம் அவர்களின் வாழ்விடம் மற்றும் அனைத்து சமூக, பொருளாதார, தொழில் உரிமைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

கடந்த 1501 வருட காலப்பகுதியில் 17 வருடங்களைத் தவிர பாரிய தோட்டங்கள் அனைத்தும் வெளிநாட்டு, உள்நாட்டு கம்பனியாளர்க்ளின் கீழேயே இருந்துவந்துள்ளன தனியார் கம்பெனிகளது பிரதான நோக்காக லாபம் இருந்துவருகின்றமையினால், அவர்களின் சேமநலன்களில் அக்கறை காட்டமாட்டார்கள் என்பது இயல்பு. எனினும் அதனை நடைமுறை ரீதியாக தோட்டத் தொழிலாளர்கள் பல தசாப்தங்களாக அனுபவ ரீதியாக் கண்டுணர்ந்துள்ளனர். இதன் விளைவே 70 களின் பிற்பகுதியில் இலங்கையின் இடதுசாரிகளும் தேசியவாதிகளும் தோட்டங்க்ளை அரசமயமாக்க மேற்கொண்ட முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்கினர்.

எவ்வாறாயினும், பல்வேறு எதிர்பார்ப்புக்ளுடன் அரசமயத்தை ஆதரித்த தோட்டத்தொழிலாளர்கள், பல கசப்பான அனுபவங்களையே அரசமயத்தின் பின்னால் கண்டனர் தம் வாழ்நிலையில் பாரிய மாற்றத்தைக் காணவில்லை. எனினும் 1978 முதல் 1992 வரை மேற்கொள்ளப்பட்டுள்ள (அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன்) ஒரு சில சமூகநல சேவைகளைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதே வேளை தமது தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் ஒரு சில பாரிய வெற்றிகளை அரசமயத்தின் கீழ் பெற்றுள்ளனர். இப்பதினேழு வருடங்களில் பெற்ற அனுபவமும், உரிமைகளும் இதற்கு முன்னைய தசாப்தங்களில் (தனியார்மயத்தில்) பெற்ற அனுபவத்தை விட முற்றிலும் மாறானதாகும்

மாறுபட்ட இரு அனுபவங்களைப் பெற்ற மலையகம் மீண்டும் ஓர் புதிய அனுபவத்தை சந்திக்கத் தயாராகியுள்ளது. பெருந்தோட்டங்களின் முகாமைத்துவம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்புதிய அனுபவ்த்தை மலையக மக்கள் எவ்வாறு எதிர்நோக்குவர் என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. ஆனால் மலையக தொழிற்சங்க தலைமைகள் தம் அனுபவ பின்னணியைக் கொண்டு ஆருட முடிவுகளுக்கு வந்துள்ளனர் இதனைக் கண்ணுற்ற 'குன்றின் குரல்' இத்தொழிற்சங்க் தலைவர்கள் இவ்விடயம் தொடர்பாக எவ்வாறான அபிப்பிராயங்களை, சந்தேகங்க்களை, எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளனர் என்பதனை மலையகம் அறியும்வண்ணம் அவர்களை செவ்வி கண்டுள்ளது.

முறையே அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான், திரு. எஸ். நடேசன், திரு. விக்ரமபாகு கருணாரத்ன என்பவர்களின் கருத்துக்களை தாங்கி வருகின்றது. இம்மூவருள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களைத் தவிர ஏனைய இருவரும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனியார்மயத்தின்கீழ் பாதகமான அனுபவங்க்ளையே சந்திக்க நேரிடும் எனக் கூறியுள்ளதுடன் அமைச்சர்

தொண்டமான் சாதகமான அனுபவங்களையே சந்திப்பர் என ஆருடம் கூறியுள்ளார்.

இம்மூவரின் கருத்துக்களிலிருந்து மலையகம் எதிர்நோக்கியுள்ள சாதக, பாதக தன்மைகளை கோடிட்டுக் காணமுடிவதுடன் வாசகர்களும் ஓர் சுபமான தீர்வினையை மேற்கொள்ள வாய்ப்பளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வழமைபோல் இவ்விதழும் சிறுகதை, கவிதை என்பனவற்றைத் தாங்கிவருவதுடன், இலங்கை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற மாணவரான வீரா. பாலச்சந்திரன் அவர்கள் குன்றின் குரலுக்கு அனுப்பிய சிறுகடிதத்தையும் இவ்விதழ் தாங்கிவருகின்றது. கடிதம் சிறிதாக இருந்தாலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் எது எமக்கு தாயகம் இலங்கையா? இந்தியாவா? என்ற கேள்வியைத் தோற்றுவிப்பதுடன் எந்த நாட்டின் தாயகத்திற்காக போராடுவது நியாயமாக அமையலாம் என்பதைப்பற்றி விடை காண எமக்கே இடமளிக்கின்றது. (இதேவேளை இராகலைச் செல்வம் எழுதிய 1997 மே 15 கட்டுரை மண்ணுக்காக உயிர்நீத்த சிவனு லெட்சுமணனை நினைவூட்டுவது இவ்விடயத்திலே முக்கிய மைல் கல்லாகும்.)

எமது வேண்டுகோளுக்கிணங்க கடந்த குரலை கண்ணுற்ற வாசகர்கள், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும் ஆக்கங்களையும் ஆர்வத்துடன் எழுதியனுப்புவதிலிருந்து மலையகத்தின் அறிவுதாகம் அதிகரித்துவருவதைக் காணமுடிகின்றது. அத்தாகத்தை முழுமையாக பூர்த்தி செய்ய குன்றின் குரலால் முடியாவிட்டாலும், ஒரு சிறு பகுதியையேனும்பூர்த்திசெய்யமுயலும். எனவே படிப்படியாக ஆக்கங்களையும் விமர்சனங்களையும் குன்றின்குரல் பிரசுரிக்குமென உறுதியளிப்பதுடன் இவ்விதழின் விமர்சனங்களையும் சுய ஆக்கங்களையும் தங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது

-பொறுப்பாசிரியர்

இராகலைச் செல்வம்

# 1977 மே 15

எங்கு அடக்குமுறை இருக்கின்றதோ அங்கெல்லாம் அதற்கெதிரான போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. எங்கெல்லாம் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளனவோ அங்கெல்லாம் தியாகங்களும் இடம்பெற்றுள்ளன என்று கூறுவது மலையகத்திற்கும் சிறப்பாகப் பொருந்தும்

மலையக மக்கள் போராட்டத்தையே வாழ்க்கையாக் கொண்டுள்ளனர். அதாவது வாழ்வதற்காக, உரிமைக்காக, அடக்குமுறையைத் தவிர்ப்பதற்காக பெரும் இயந்திரம் தாங்கி அல்லது ஸ்தாபனப்பட்டு, சித்தாந்தம் தெளிந்து முழு வர்க்க விடுதலைக்காகப் போராடாவிட்டாலும்கூட தம் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக ஆங்காங்கே சிறுசிறு போராட்டங்களையாவது நடத்தியுள்ளார்கள்.

(உருளவல்லிதோட்டத்தில் ஆரம்பித்து இன்றுவரையும் பல நூற்றுக்கணக்கான போராட்டங்களைச் செய்துள்ளனர்.) படுசேவலமாக ஒடுக்கப்பட்டிருந்த இம்மக்களின் இன்றைய வளர்ச்சிக்காக பல உயிர்களை காணிக்கையாக்கியுள்ளார்கள். ஆனால் இத்தியாகங்கள் இன்றுவரை ஒழுங்கான ஆய்வாக அல்லது நூல்வடிவாக வெளிக்கொணரப்படவில்லை. இவ்வாறு உயிர்நீத்தவர்களின் பெயர்கள் மறக்கப்படுவதும், மறைக்கப்படுவதும் சில சுயநலக்கும்பல்களின் திட்டமிடப்பட்ட செயலாக அமைகின்றது. நுணுகிப் பார்த்தால் விடயம் விளங்கும்.

(இந்தப் போராட்டங்களின் தொடர்ச்சியாகவே டெவன் போராட்டமும் அமைந்துள்ளது 1977ம் ஆண்டு மே 11ந் தேதி காணிச்சீர்திருத்த சட்டப் போர்வையில் 7500 ஏக்கர் நிலப்பரப்பை டெவன் வட்டாரப் பிரதேசத்தில் அரசுநிலம் சுவீகரிக்கப் புறப்பட்டபோது அதற்கு மக்கள் எதிர்ப்புதெரிவித்தனர்.) அதனையும் பொருட்படுத்தாத அரச நில அளவையாளர்கள் டெவனில் கைவைத்த போது மக்களின் கிளர்ச்சி தடைபெற்றது. இதனை சற்றும்எதிர்பார்த்திராத நில அளவையாளர்கள் திரும்பிச் சென்று மீண்டும் பொலிசுடன் திரும்பி வந்தனர். போராட்டம் உக்கிரமடைந்தது. (ஒன்று திரண்டெழுந்த தோட்டமக்களின் எதிர்ப்புக் குரல் ஒக்ஸ்போர்ட்டில் தன் சிறிய தந்தையுடன் உறங்கிக்கொண்டிருந்த சிவனு இலட்சுமணனின் உள்ளத்திலும் ஒலித்தது. விரைந்து எழுந்த இலட்சுமணன் போராட்டத்திற்குப் புறப்பட்டபோது தாய் அவ்ரை தடுத்தாராம். அதனையும் மீறி சென்கிளேயர் ஆற்றை நீந்தி கடந்து அவர் போராட்டத்திற்கு முன்னே சென்றிருக்கிறார். இதற்கிடையில் மக்களுடன் கைகலப்பில் ஈடுபட்ட பொலிஸ், துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது வேட்டுகளில் ஒன்று சிவனு இலட்சுமணனின் உடலை ஊடறுத்துச் சென்றது. இவரின் உடல் கொட்டகலையில் வைத்து மக்களின் ஆர்ப்பாட்டங்களூர்கு மத்தியில் பத்தனை புல்நிலத்தில் அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. இவருக்கு சிலை வைப்பதாகக் கூறி சில தலைவர்கள் ஒட்டு வேட்டையாடினார்கள்

ஆனால் அடுத்த வருடமே அவர் உடல் அடக்கம் செய்யப்பட்ட புதைகுழி மேடு இராணுவத்தால் உடைத்தெறியப்பட்டது.. இதற்கெதிராக எவரும் எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை. இதனை கவிஞர் ராஜேந்திரன் கூறும்போது

''வருடந்தோறும் தேர்தல்
வந்திருந்தால்
வாரந்தோறும் நீ நினைக்கப்பட்
டிருப்பாய்–ஆனால்
அவர்கள் உனக்கு மட்டுமல்ல
உன் நினைவுகளுக்கும் அஞ்சலி
செலுத்திவிட்டார்கள்

பொன் மண்டபம் அமையவேண்
டிய
புதைகுழியில் புல் மண்டிவிட்ட
தாக்
வருத்தப்படுகின்றாயா?
சந்தா பணத்தையே கணக்கிடும்
இவர்களால்-உன்
தியாகத்தை கணிப்பிடத் தெரி
யாது
சோதரனே''

என்கிறார்.

சிவனு இலட்சுமணனைப்பற்றி கவிஞர் சு. முரளிதரன், கவிஞர் மல்லிகை சி, குமார் ஆகியோர் கவிதைகளும்; ஜே. சற்குருநாதன் கட்டுரையும் எழுதியுள்ளனர்.

சிவனு இலட்சுமணனின் போராட்டத்தை முக்கியத்துவப்படுத்தக் காரணம் இவரின் இழப்பினால் 7500 ஏக்கர் நிலம் தடுக்கப்பட்டது. இதிலுள்ள மக்களின் வாழ்வு வீதியிலே நிற்கவேண்டி இருந்தது தடுக்கப்பட்டது மட்டுமன்றி பிற்காலத்தில் எடுக்கப்படவிருந்த ஆயிரக்கணக்கான நிலம் தடுக்கப்பட்டது. அன்றும் இன்றும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளால் மலையக மண் பறிபோய்க்கொண்டிருக்கிறது இதனை அறிந்தும் அறியாதது போல் இருக்கும் மலையகத் தலைவர்கள் மலையக மக்களுக்கு செய்யும் துரோகத்தில் மிகப் பெரிய துரோகமாகும். இன்றும் கவலைக்குரிய விடயம் யாதெனில் சிவனு இலட்சுமணனின் கல்லறை கட்டப்படுமானால் கயவர்களால் உடைத்தெறியப்படும் என்பதே ஆகும். இனியாவது சிவனு இலட்சுமணனின் தியாகம் மதிக்கப்படவேண்டும். சிலைவைக்க முடியாவிட்டாலும் ஒரு நினைவு மண்டபமாவது நிறுவவேண்டும். அதுமட்டுமன்றி மலையகத்துக்குரிய இன்னும் பல தியாகங்களுடாகவாவது.காப்பாற்ற இன்றைய இளைஞர்கள் முன்வர வேண்டும்

★

## கல்யாணம்

ராமனைத் தேடிய
சீதைகள்தான்
நாங்கள் அன்று


ராவணனாவது
கிடைக்கமாட்டானா
என ஏங்கும்
பேதைகள்தான்
நாங்கள் இன்று

## சீதனம்

கல்யாணச் சந்தையிலே
கடன் கேட்டு
கண்ணீர் விடும்
கன்னியர் நாங்கள்– எங்களை
கல்யாணம் பண்ண
கணக்கைக் கேட்கிறார்கள்
கடனாளி ஆண்கள்

எஸ். அமராவதி
கெங்கல்ல

இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலையை ஏழு தரகர் நிறுவனங்கள் சந்தைப்படுத்துகின்றன




## மலையக நாவல் பாட நூலாகியது

மலையகத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நாவல்களில் ஒன்றான தி. ஞானசேகரன் எழுதிய 'குருதிமலை' மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதுமாணிப்பட்டத்திற் பாட நூலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நாவல் தோட்டம் துண்டாடப்படுவதை எதிர்த்து போலிசாரின் குண்டுக்குப் பலியாகும், மண்ணுக்காக உயிர்த் தியாகம் செய்யப்பட்ட வரலாற்றை எடுத்துச் சொல்லும் நாவலாகும். மலையக நாவல்களில் வித்தியாசமான நாவலாகும்

குருதிமலை தந்த தி. ஞானசேகரன் மருத்துவத்துறையில் பயின்று தமிழ் மீது கொண்ட ஆர்வத்தால் பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிமாணவராக பீ. ஏ. பட்டம் பெற்றுள்ளார்

கால் நூற்றாண்டுக்கும் மேலாக பெருந்தோட்டத்துறையில் வைத்திய அதிகாரியாக .இருக்கும் இவர் தற்போது புசல்லாவ, பீக்கொக் குறூப்பில் பணியாற்றுகிறார். இவர் எழுதிய இரு நாவல்களுக்கு சாகித்திய மண்டல பரிசு கிடைத்துள்ளது. 1980 ல் வெளியான 'குருதிமலை' அவ்வாண்டின் தலைசிறந்த நாவலாக தெரிவுசெய்யப்பட்டு சாகித்திய விருது பெற்றது'.



# தோட்ட நிர்வாகம் தனியார் மயப்படுத்தல் தொடர்பாக இ. தொ. கா. தலைவர் திரு.எஸ். தொண்டமான் அளித்த பேட்டி

**"மக்கள் தமது பலத்தைப் பிரித்து குட்டிச்சங்கங்களில் சேர்ந்து கொண்டிராமல் ஒரே சங்கத்தில் உறுதிப் பாட்டுடன் நின்றால் காங்கிரஸ் அவர்களின் வருங் காலத்தை உறுதிப்படுத்த முடியும்"**

*கேள்வி; தோட்டங்களை தனியார் மயமாக்கும் அரசின் முயற்சியை தங்கள் தொழிற்சங்கம் எவ்வித நிபந்தனையுமின்றி ஏற்றுக்கொண்டுள்ளது. இதைப்பற்றி தங்கள் கருத்தை அறிய விரும்புகின்றோம்.*

*பதில்: எவ்வித நிபந்தனையுமின்றி என்பது ஓர் முன்மாதிரியாக இருக்கும் என நினைக்கிறேன். தோட்டத் தொழிலாளி ஆகக் கீழ் மட்டத்திலிருக்கிறான். அதில் வேலை செய்யும் எல்லோரையும் எடுத்துப் பார்த்துள்ளோம். எந்தளவு அவர் வேலை செய்திருந்தாலும், எத்தனை வருடம் வேலை செய்திருந்தாலும் பரம்பரையாக உழைத்திருந்தாலும்கூட அவனுக்கு ஒன்றுமில்லை. ஆதலால் இப்போதிருக்கும் நிலையை தொடர விடுவதால் அவனிருக்கும் மட்டமான நிலையிலிருந்து அவனால் மீள முடியாது. இதனால், இன்றைய நிலையில் மாற்றம் ஏற்பட்டால், தொழிற்சங்கம் தனது செல்வாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கு பிரயோகிக்கலாம். காங்கிரஸ் போல் எந்த ஒரு ஸ்தாபனமும் 50 ஆண்டுகள் சேவை செய்ததில்லை, ஏற்பட்டுள்ள அனுபவத்தின் அடிப்படையில் இன்றைய செல்வாக்கைக் கொண்டு இன்றிருக்கும்* CAPTIVE LABOUR *என்ற நிலையை மாற்ற முடியும்.*

*நாம் ஒத்துக்கொள்வதன் முன்னர் ஏற்பட்ட அத்தகைய புரிந்துணர்வின் அடிப்படையில்தான் சம்மதித்துள்ளோம். அதாவது, தனியார் மயமாக்குதல்* COMMERCIAL SIDE, *தான் அதாவது வர்த்தகம்,* SOCIAL SIDE *இல் அதாவது (தொழிலாளர்கள் வாழும் 'லயன்'கள், காய்கறித்தோட்டம், கோவில், வீட்டுப் பக்கத்துக் காணிகள் எல்லாம் தனியார் மயப்படுத்தப்படமாட்டா. இவைகள் அதிகாரசபையொன்று ஏற்படுத்தப்பட்டு, கூட்டுறவு முறையில் நிர்வகிக்கப்படும். இதற்கு ஒத்துக்கொண்டமையினால் தான் நாம் சம்மதித்தோம். இதை நீங்கள் தெரிந்துகொண்டிருந்தீர்களேயானால் நீங்கள் இந்தக் கேள்வி கேட்டிருக்க மாட்டீர்கள் ''ஒரு நிபதனையும் இன்றி'' என்று குறிப்பிட்டிருக்க மாட்டீர்கள். இன்னும் 10, 12 விடயங்கள் தொடர்பாக பேசியுள்ளோம். அவற்றிற்கு செவிமடுப்பதும், மடுக்காது விடுவதும் நம் ஸ்தாபனம் இருக்கும் பலத்தைப் பொருத்தது. தோட்டத் தொழிலாளர்களை—பல குட்டிச் சங்கங்கள் கூடிக் கொண்டு பிளவு படுத்திக்கொண்டு போனால் முன்னேற்றம் காண முடியாது. தொழிற்சங்கம், பலமுள்ள—செல்வாக்குள்ளதாயிருந்தால், எந்த சக்தியினாலும் அதை புறக்கணிக்க முடியாது.)*

பேட்டி கண்டவர்: பெ. முத்துலிங்கம்

*கேள்வி: நீங்கள் கூறினீர்கள், தொழிலாளர் குடியிருப்பு, சமூக சேவை விடயங்கள் கூட்டுறவு முறையின் கீழ் நிர்வகிக்கப்படும் என்று. அப்படியென்றால், அத்தகைய கூட்டுறவு அமைப்பிற்கும் தற்போதுள்ள பிரதேச சபைகளுக்குமிடையிலான உறவுகள் எவ்வாறிருக்கும்?*

*பதில்: காலக்கிரமத்தில் எந்தெந்த அமைப்பை எவ்வாறு ஏற்றுக்கொள்வதென்பது தொழிலாளர் நலன்கள் மீதான அக்கரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். முன்னர் என்றால் நாம் நினைத்தோம், தொழிலாளர்கள் அவர்களின் சொந்த உரிமைகளை அனுபவிக்க வேண்டு*

மென்று. எனக்கு சொந்தமான வெவண்டனில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் 22 ஏக்கர்களை பிரித்துக் கொடுத்தோம். அதாவது அரை ஏக்கர் விகிதம். அவர்கள் அதை நாட்டு முதலாளிமார்களுக்கு விற்று விட்டுபோய் விட்டார்கள். எனவே உடனேயே சொந்தமாக கொடுத்துவிட்டால் அவர்கள் தொடர்ந்து வைத்திருக்க மாட்டார்கள். அத்துடன் இனத்துவேசத்திற்கும் வழிகோலும் இந்த சூழ்நிலையில் வருங்கால சந்ததிகளும் அனுபவிக்கக்கூடிய முறையில் திட்டமிட்டு அமைக்கப் படவேண்டுமென்பதே எமது அபிப்பிராயம். அதற்கு மக்கள் தமது பலத்தை பிரித்து—குட்டிச் சங்கங்களில் சேர்ந்துகொண்டிராமல், ஒரே சங்கத்தில் உறுதிப்பாட்டுடன் நின்றால், காங்கிரஸ் அவர்களின் வருங்காலத்தை உறுதிப்படுத்த முடியும்.

கேள்வி: இப்போது சாதாரணமாக ஒரு தோட்டத்தில் நீர்ப்பிரச்னையை தீர்ப்பதற்கோ, அல்லது குடிநீர் வழங்கவோ பிரதேச சபை உறுப்பினர் உரிமையை பெற முடியாதிருக்கின்றது. காரணம் தோட்ட நிலங்கள் அனைத்தும் ஒன்றில் JEDB அல்லது SLSPC க்கு சொந்தமாக விருக்கும். எனவே பிரதேச சபைக்கு எதுவும் செய்ய முடியாது. மறுபுறம், நாம் ஏலவே கூறிவந்துள்ளோம் – நீங்களும் கூறியுள்ளீர்கள். தோட்டங்கள் கிராமங்களாக அங்கீகரிக்கப் பட வேண்டுமென்று. அத்துடன் கிராம மக்களின் அனைத்து சுதந்திரமும் உரிமையும் இருக்க வேண்டும் தங்கள் கருத்தென்ன?

பதில்: கிராமம் எனும்போதே, அனைத்து உரிமைகளையும் கொண்டிருக்க வேண்டுமென்பது பொருளாகும். அது உடனேயே கிட்டாதிருக்கலாம். காலக்கிரமத்தில் அது ஸ்திரப்படுத்தப்படல் வேண்டும். அடிப்படையில், அனைத்து வசதிகளையும் கொண்டதே கிராமம். தனியார்களிடமிருந்து—முதலாளிகளிடமிருந்து எடுத்தபோதே அவ்வுரிமைகளுக்கான அடித்தளம் வகுக்கப்பட்டது. எனவே இது காலக்கிரமத்தில் நடைபெறுவது சுலபம்.

கேள்வி: உங்கள் 50 வருட அனுபவத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களில் தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வது, அரசுடைமைக்காலத்திற்கு முன்னறிருந்த தனியார் நிர்வாகத்தின் கீழா, அல்லது அரசுடைமையாக் கப்பட்ட பின்னரா—இலகுவாயிருந்தது?

பதில்: என் அனுபவத்தில் தனியாரின் நோக்கு லாபமே, எனவே, தொழிற்சங்கம் உறுதியாக நிற்கும்போது, அதற்கு செவி சாய்ப்பார்கள் அரசுடமையின் கீழ், அரச உத்தியோகத்தர் களாய் விடுகிறார்கள். அரசும் தொழிற்சங்கமும் ஏதாவது செய்து கொள்ளட்டும் என்ற மனோபாவத்தில் நிர்வாகிகள் அக்கறை செலுத்துவதில்லை.

தனியார்கள்—லாபத்தில் அக்கறை செலுத்துவதனால்—தொழிற்சங்கம் பலமாயிருக்கும் போது, சுலபமாக பிரச்னைகளை தீர்த்துக் கொள்ளலாம். ஏனெனில், தனியாருக்கு வேண்டுவதெல்லாம் லாபமே. லாபத்தை உயர்த்திக்கொள்வதே அவர்களின் நோக்கம்.

கேள்வி: அவ்வாறெனின் தனியார் மயத்தின் பின்னர் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பது இலகுவாகும் என நீங்கள் கூறுகின்றீர்கள்?

பதில்: அதே—வேளை தொழிலாளர்கள் பிளவு படாது—ஒற்றுமையாயிருந்தால்.

கேள்வி: 'லாபம்' எனும்போது முதலாளித்துவ வாதிகள் இன்னுமொரு விடயத்தையும் கூறுகின்றார்கள். முதலாவது குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளர்களை அமர்த்திக்கொள்வது. இது அவர்களின் முக்கிய அம்சமாக கருதுகின்றார்கள். ஆனால் தொழிலாளர்களை பொறுத்தவரை—பல லட்சக்கணக்கானவர்கள் இருக்கும் அதே வேளை—இன்னும் தோட்டங்களில் வேலையற்றோர் பிரச்னை நிலவுகின்றது. புதிய முதலாளிகள் கையேற்ற பின்னர் தொழிலாளர்கள் குறைப்பு நடைபெறுமா அல்லது தொழிலாளர்களின் வாய்ப்பு அதிகரிக்குமா?

பதில்; தொழிற் சங்கங்கள் சரியாகவிருந்து அரசும் கொள்கை வகுத்தால், தொழிலாளர்களின் வாய்ப்பு அதிகரிக்கும். ஏனெனில், இன்றைய கணக்கீட்டின்படி ஹெக்டேயருக்கு 1000 கிலோ தான் வருகிறது. மற்ற நாடுகளில் 2500 கி. கி கிடைக்கின்றது. உலக நாடுகளுடன் ஒப்பீட்டளவில் நாம் 50% குறைவாக பெறுகின்றோம். ஆனால் ஏன் இதை அரசால் செய்ய முடியவில்லை? தக்க சமயத்தில் உரம் இட முடியாது, வாங்கினாலும் சேர்த்துப்போட ஆளில்லை, தனியார்கள் இதை செய்தால், நிச்சயமாக யீல்ட் கூடும் தொழில் வாய்ப்பு கூடும்.

கேள்வி: ஆனால், முதலாளித்துவ பொருளாதார முறையின்படி, ஆட்குறைப்பு முக்கிய அம்சமாக இருக்கின்றது. அதேவேளை தோட்டத் துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரை, அனைத்து அறிக்கைகளும் தேவைக்கதிகமான தொழிலாளர்கள் இருப்பதாக கூறுகின்றன. எனவே, ஆட்குறைப்பு நடைபெறாது என்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்.

பதில்: ஆட்குறைப்பு என்பது, கூடிய பட்சதிறமை என்று வரும்போது. உதாரணமாக, ஆகக்கூடியது 2000 கிலோதான் வருகின்றது எனின் இதை உயர்த்த வழி இல்லாவிடின், நிச்சயமாக, ஆட்குறைப்பை மேற்கொள்ள முயலலாம். முழு அபிவிருத்தியடையும்போது அது தேவைப்படாது. நமது அண்டை நாடான இந்தியாவில், உற்பத்தி அதிகரிப்பு முயற்சிகள் வெற்றியடையும்போது, இங்கு ஏன் அது சாத்தியமில்லை எனவே உற்பத்தி அதிகரிப்பு முயற்சியையே முதலில் மேற்கொள்வார்களே தவிர, உடனடியாக ஆட்குறைப்பை மேற்கொள்ள மாட்டார்கள்,

கேள்வி: தனியார் மயத்திற்கு எதிரான எதிர்த் தொழிற்சங்கங்கள் மலையகச் சிங்கள மக்கள் மயானத்திற்கு காணி கோருவதற்கும் நீங்கள் எதிராயிருப்பதாக சொல்கின்றார்கள். நேற்று கண்டியில்—ஒரு கூட்டத்தில்—நான் இருந்தபோது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், கிரிமெட்டிய தோட்டத்தில் 1 ஏக்கரை மயானத்திற்கு ஒதுக்கித்தர அரசை கேட்டதாகவும் ஆனால் அவருக்கு திரு. தொண்டமான் அனுமதி கிடைக்கவில்லை என பதில் கிடைத்ததாகவும் சொன்னார். இதைப்பற்றிய தங்கள் கருத்தென்ன?

பதில்; இறந்தவர்களை புதைக்க யாரும் இடம் தர மறுக்க மாட்டார்கள். அதற்கு தகுந்த காணியை கோராது, காணியொன்றை குறிப்பிட்டு கேட்டிருந்தால், நிச்சயம் தந்திருக்க மாட்டார்கள். உதாரணமாக—திஸ்பனை தோட்டத்தில் 2500 போன வருடமும், முந்திய வருடமும் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது. எனவே, இதெல்லாம் அரசியற் பிரச்சாரம். இவைகளையிட்டு நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

கேள்வி: இன்னுமொரு எதிரணிப் பிரிவினர் நீங்கள் அண்மையில் முன்வைத்த வட, கிழக்கு பிரச்னை தொடர்பான யோசனையின் பின்னணியில் தனியார்மயப்படுத்தலின் பின்னர் சுமார் 2 லட்சம் தொழிலாளர்கள் வேலையற்றுப் போவதாகவும், வட-கிழக்குப் பிரச்சினை தீர்வின் பின்னர், அவர்களை கிழக்கில் குடியேற்ற திரு. பிரபாகரன், ஒப்புக்கொண்டுள்ளதாகவும் கூறுகின்றனர். உங்கள் கருத்தென்ன?

பதில்; தெய்வலோகம் போன்ற இந்த இடத்தை விட்டு எவர் கிழக்கு மாகாணத்திற்கு போக விரும்புவார்கள். அந்தமாதிரி முட்டாளாக நான் இன்னும் ஆகவில்லை.

கேள்வி: நீங்கள் பார்த்திருப்பீர்கள், பத்திரிகைகளிலும் ஏனைய தொடர்புச் சாதனங்களிலும் முருகப்பா கம்பெனியை பற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது. இக்கம்பெனியில் நீங்கள் ஒரு பங்குதாரர் என்றும் அதே வேளை வெளிநாட்டுக் கம்பெனிகளின் தரகராகவும் இருந்து கொண்டு, தொழிலாளர்களை ஏமாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனைப்பற்றி—குறிப்பாக முருகப்பா கம்பெனியை பற்றி—நீங்கள் கூறுவதென்ன?

பதில்: அவர்களைப் பற்றி நான் எதுவும் அதிகமாக அறிந்துகொண்டதில்லை. ஒவ்வொருவரும் அவரவர் புத்தி அடிப்படையில் மற்றவர்களை கணக்கிடுகின்றார்கள். என நினைக்கின்றேன். அவ்வாறானவர்களே, அவ்வழியில் செல்பவர்கள் என்பதை சொல்லலாம். அத்தகைய பழக்கம் இது வரை எனக்கில்லை. இனிமேலும் இராது.

கேள்வி: பிரதேச சபை உறுப்பினர்களினால் தத்தமது பிரதேசத்திற்கு சுதந்திரமாக சேவையாற்ற முடியாதிருக்கின்றது. குறிப்பாக தோட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை. இதை நான் எனது கட்டுரையிலும் குறிப்பிட்டிருந்தேன். இவ்வாறான நிலைமையில், பிரதேச சபைகளினால் உறுதிப்படுத்தப்படும். உரிமைகளை எவ்வாறு தோட்ட மக்களினால் அனுபவிக்க முடியும்.

பதில்: அப்படியென்றால. எவ்வாறு ஏக்கரேஜ் வரி வசூலிக்க முடியும்?

கேள்வி: ஏக்கரேஜ் டெக்ஸ் கடந்த காலங்களிலும் UC அமைப்புக்களின் போதிருந்தே எடுக்கப்பட்டு வருவது. UC சட்டதிட்டப்படிதான் இன்னும் வசூலிக்கப்படுகின்றது, ஆனால் இன்று நடைமுறை தொடர்பான வரைவிலக்கணப்படி கிராமத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளார்கள். உதாரணமாக, அண்மையில்

---

## வீடும் மரமும்

வீட்டுக்கு ஒரு
மரம்
வளர்ப்போம்
வீடு
இருந்தால்தானே...

ஜோ. பரஞ்சோதி

---

பதுளையில் நான் பங்குபற்றிய கூட்டத்தில் உங்கள் சங்கப் பிரதிநிதி, UC டெக்ஸ் 80 விகிதம் தோட்டத்திலிருந்தே சென்றாலும், தொட்டியொன்றை கட்டிக்கொள்வதற்கு அனுமதி மறுக்கின்றார்கள். நாங்கள் JEDB அனுமதி பெறவேண்டியுள்ளது என்று சொன்னார்.

பதில்: அனுமதி பெறவேண்டி யிருக்கும் அதற்காக உரிமைகள் இல்லை என்று சொல்ல முடியாது. கட்டுப்பாடுகள் இருக்கத்தான் வேண்டும் கிராமம் கிராமமே அதற்கான சட்டதிட்டங்கள் இருக்கத்தான் செய்யும். கல்யாணம் பண்ணியவுடனேயே குழந்தை கிடைக்குமா. அதைப்போல் இப்போதுதான் ஆரம்பித்துள்ளோம். இதுவரை நமது சமூகத்தை ஒதுக்கியே வைத்திருந்தார்கள். சிங்களவராயினும் சரியே, தமிழராயிருந்தாலும் சரியே, இயல்பாக உரிமை பெற்றவர் யாருமில்லை. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு ஜயன்ட் (பலவான்) 50 க்கு 50 கேட்டார். எதுவுமே கிடைக்கவில்லை. செல்வநாயகம் பெடரலிசம் கேட்டார் கிடைக்கவில்லை. தமிழ்மொழிக்கு உரிமை கேட்டார்—கிடைக்கவில்லை. இன்றைக்குத்தான்—இந்திய ராணுவம் வந்துதான் இதைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது. நாம் மட்டுமே பிரஜா உரிமை சட்டத்தை- உண்டாக்கியிருந்ததை இல்லையெனப் பண்ணினோம். இந்திய அரசு எத்தனையோ ஒப்பந்தங்களை செய்தும் ஒன்றும் உருப்படியாகவில்லை. நேரு - கொத்தலாவல உடன்படிக்கையை இல்லாதடித்தோம். சிரிமா -சாஸ்திரி ஒப்பந்தத்தை மாற்றியமைத்தோம்.(இன்று இந்நாட்டில் போராடி உரிமைகளை பெற்றுக்கொடுத்த ஒரே ஸ்தாபனம் இ.தொ.கா.வே அதன் அடிப்படையில் பார்க்கும்போது, நமது மக்கள் ஒற்றுமையாயிருக்கும்வரை எதையும் செய்யலாம். எந்த நியாயமான உரிமையையும் பெற முடியும். எந்த அரசும் நாம் அரசு நாம் செய்வதுதான் சட்டம்' என்று சொல்ல முடியாது. மக்கள் சக்தி அரசை விட பெரியது என்பதை நாம் நிரூபித்துள்ளோம். கத்தி, துவக்கு எடுக்கவில்லை. உரிமைகளை அடைவதல்ல முக்கியம். மக்கள் பலனை அனுபவிப்பார்களா என்பதே முக்கியம். அரசு முன்னர் நீங்கள் சொன்ன புதைக்குழிப் பூமி விடயம் யாரும் தவறாகப் புரிந்துகொள்வதற்கில்லை. நாம் அடைந்த வெற்றியை வேறு யாராலும் அடைந்திருக்க முடியுமா? பொறாமையே காரணம். யூ. என். பி. நமக்கு விரோதமாக இருந்தது எனினும், அவர்களுடன் ஒத்துழைத்ததனால், அவர்கள் கட்சியிலேயே நாம் வேட்பாளர்களை நியமித்துக்கொள்கின்றோம். வேறு யாராலும் அம்மாதிரி துணிவுடன் செயல்பட்டிருக்க முடியாது. மக்களும் ஒத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். நாம் சொன்னால் மக்கள் யூ. என், பிக்கு ஓட்டுப் போடுகிறார்கள். நமது பலம் இதனால் நிரூபிக்கப்பட்டுள்ளது. முன்னர். பிரஜாவுரிமை பதிவுப் பிரஜாவுரிமையாகவே இருந்தது. இன்று அது இல்லை, நாமும் சிங்கள மக்களைப் போன்றே பிரஜா உரிமையை அனுபவிக்கின்றோம். இப்போது சர்ட்டிபிகேட் தேவையில்லை. இதுவெல்லாம் நமது அணுகு முறையின் பயனே. இதைக்கண்டு எல்லோரும் பொறாமைப் படுகின்றார்கள். இதனால்தான் சிங்கள மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க நினைக்கின்றார்கள். தொண்டமான் அரசராயிருக்கிறார் என்று சொல்கின்றார்கள். அதே போல் இந்த ''புதைக்குழிக்கதையும்'' இப்படியெல்லாம் அநியாயம் செய்யும் தொண்டமானுடன் இந்த அரசும் ஒத்துழைக்கின்றது. என்று பிரச்சாரம் பண்ணுகிறார்கள் அரசும் இதனால் தேர்தலில் வெற்றி பெற முடியாது போய்விடுமோ என்ற அச்சத்துடன் செயல்பட ஆரம்பித்தால், நமக்கும் வெறுப்பு மேலீட்டு விடும். நாம் ஒதுங்கி விடுவோம். 30 வருடமாக நமது அணுகுமுறையில் வெற்றி கண்டுள்ளோம். இதனால் அதிர்ச்சியடைந்துள்ள எதிர்ச்சக்திகள், நாளடைவில் மலையகம் சிங்களவர்களுடையதல்லாதாகி விடும். என்ற அளவிற்கு வேண்டுமென்றே, திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வருகின்றன.)

## அடிமையின் விழிப்பு

கருத்தியலில்
மடமையாக்கப்பட்ட
மலையகத்தவன்
நான்

என் வயிற்றுப்
பசிக்காக மட்டுமன்று
அரசின் பொருளியல்
சுரண்டலுக்கும்
இலக்காகிய
நான்
மதத்தின் போதனையால்
மௌனியாக்கப்பட்டுள்ளேன்

நான்
விழித்தெழுந்தேன்
சிவனொளி பாதமலையும்
அதிரும்
என் கரங்களில்
இடப்பட்ட விலங்கும்
தகரும்.

வி. ஆர். கே. மதிவாணன்
(கார்பெக்ஸ் த. வி. ஹட்டன்)

**கேள்வி:** இப்போது மலையகத்தில் அடிக்கடி பாதுகாப்பு என்ற பிரச்னை பற்றிப் பேசப்படுகின்றது. ஒரு சாரார் தோட்டங்கள் அரசுடமையாகத் தொடர்ந்தால் மட்டுமே தொழிலாளர் பாதுகாப்பு உறுதியடைந்துவிடும் என்கிறார்கள். மறுசாரார், தனியார் துறையின் கீழ் தான் இது சாத்தியம் என்கிறார்கள், இதற்கு காரணம் 1977, 81, 83, ல் அரசின் கீழுள்ள தோட்டங்கள்தான் தாக்கப்பட்டன. இந்நிலையில் அரச தோட்ட குடியிருப்புகள் தனியாக ஒதுக்கப்பட்டால் பாதுகாப்பு நிலைமை எவ்வாறிருக்கும்.

பதில்: பாதுகாப்பு மக்கள் கையில்தான் இருக்கிறது. ஒருத்தன் இன்னொருத்தனை பாதுகாப்பது என்பது அர்த்தமற்ற விடயம் முன்னர் கங்காணிகள், துரைமார் இப்போது தொழிற்சங்கம் என்ற அடிப்படையில தொழிலாளர்கள் தமது பாதுகாப்புக்காக நம்பிக்கையை மாற்றி வருகின்றார்கள், நான் சொல்வது தன்னம்பிக்கை முக்கியம். யாரையும் நம்பியிருக்கக்கூடாது. நாம் தைரியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒரு அளவில் இன்று முன்னர் இருந்த தோட்டத் தொழிலாளர்கள் இல்லை. அந்தக்காலம் மலையேறிவிட்டது.

கேள்வி தேசிய இனப் பிரச்னைத்தீர்வு தொடர்பாக நீங்கள் சமர்ப்பித்துள்ள யோசனைகளில் மலையக மக்கள் எதிர்காலம் கவனத்திற்திற்கெடுக்கப்பட்டுள்ளதா? ஏதாவது ஆலோசனைகள் வழங்கியுள்ளீர்களா?

பதில்: அது வேறு நம் பிரச்னைகள் வேறு, நம் பிரச்னைக்ளை நாமே தீர்த்துக்கொள்வோம். ஏலவே, இலங்கைப் பிரஜாஉரிமைப் பிரச்னையைக்கூட இந்திய அரசினாலும் தீர்க்கப்பட முடியவில்லை. நாம் தீர்த்துக்கொண்டுள்ளோம்,

கேள்வி: தனியார்மயப்படுத்தப்பட்டதன் பின்னர் இருக்கும் உரிமைகள் பாதிக்கப்படமாட்டா—பாதுகாப்பாக இருக்கும், அல்லது இருக்கும் உரிமைகளும் பறிபோகும் என்ற இரு கருத்துக்கள்தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

பதில்: கடந்த 50 ஆண்டுகளில் எவ்வாறு ஒற்றுமையின் அடிப்படையில் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக்கொண்டார்களோ அதேபோல் தொடர்ந்தும் இருந்தால் சிரமங்கள் வர காரணமில்லை.

கேள்வி: இப்பொழுது உலக வங்கி அறிக்கையில் ஆரம்பத்தில் தனியார் மயம் என்றபோது 'அரசியல் அழுத்தம் காரணமாக தோட்ட முகாமைத்துவம் மட்டுமே தனியாரிடம் விடப்படுகின்றது' எனினும், முழு உரிமையும் தனியாரிடம் விடப்பட்டால்தான் லாபத்தை அல்லது உற்பத்தித்துறையில் வளர்ச்சியை காணமுடியும் என்று கூறப்பட்டுள்ளது, எனவே, இன்றில்லாவிட்டாலும் எப்போதோ, தோட்டங்கள் தனியாரிடம் கொடுக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் தோட்ட மக்களிடம் இருக்கின்றது. தங்கள் கருத்தென்ன?

பதில்: காலக்கிரமத்தில் எதுவும் நடக்கலாம். யார் நினைத்தார், நாம் பிரஜாஉரிமை பெற்று இங்கேயே இருப்போம் என்று? எதுவும் நடக்கலாம் ஆனால், எந்த சூழ்நிலையிலும் நம் நிலையைப் பாதுகாப்பதற்கு தேவை நம்மிடையே ஒற்றுமை. தோட்டத் தொழிலாளர்கள் தமது ஒற்றுமையின் மூலம் தம்மை எந்த சக்தியாலும் அசைக்க முடியாது என்பதை காட்டியுள்ளார்கள். எனவே, அவர்களுக்கு புதிதாக கற்றுக்கொடுக்க வேண்டியது எதுவும் இல்லை. அதைக் கெடுக்காதிருந்தால் போதும்.

கேள்வி: தற்போது சிறு சிறு தோட்டங்கள் தனியார்களிடமிருக்கின்றன. சில முதலாளிகள் தோட்டங்களை கைவிட்டும் சென்றுள்ளனர், தொழிலாளர்களுக்கு வேலையோ, பாதுகாப்போ இல்லை. பாடசாலைகள் இல்லை. இருக்கும் வீடுகளையும்கூட இழக்கும் கட்டத்தில் இருக்கின்றார்கள். அவ்வாறான நிலை தனியார் மயப்படுதலின் பின்னர் ஏற்படாதா? நிலைமை மேலும் சீரடையும் என நாம் நம்பலாமா?

பதில்: தனியார் என்போர் பண வசதி படைத்தவர்கள். இங்குள்ள தனியார் சுரண்டல் பேர்வழிகள். அச்சுரண்டல் பேர்வழிகள் தொடர்பாக என்ன செய்ய வேண்டுபதை காங்கிரஸ் யோசித்துக்கொண்டிருக்கிறது. இன்னும் 6 மாதங்களில் நடவடிக்கை எடுக்குப்படும்.

கேள்வி: ஏலவே இங்கு இருக்கும் தனியார் தோட்டங்கள் தனியார் கம்பெனிகளுடன் இணைக்கப்படுமா?

பதில்: அதற்கும் இதற்கும் தொடர்பில்லை இஷ்டமென்றால் இணைந்துகொள்ளலாம். நாம் இதில் தலையிட மாட்டோம்.

கேள்வி: நேற்று முன்தினம் உங்கள் அமைச்சிலிருக்கும் அபுசாலி அவர்களிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தனியார் தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர் சம்பளத்தை கொடுப்பதற்கும், பண்டிகை முற்பணத்தை கொடுப்பதற்குமாக அரசிடம் கடன்

கோரியுள்ளனர். அப்படியிருக்கும் பொழுது எவ்வாறு அத்தகைய கம்பெனிகளை வளர்ச்சியான நிலைக்கு கொண்டுவருவீர்கள்?

பதில்: அது ஒரு பிரச்னையே ஆனால், அங்குள்ள தொழிலாளர்களின் துயரத்தை குறைக்கும் வழி, வகைகள் தொடர்பாகவே ஆராய்கின்றோம் சந்தர்ப்பம் வரும்போது செய்வோம். நேற்றைய கோரிக்கைக்கு உதவ அரசு ஏற்பாடு செய்துள்ளது. அமைச்சரவை முடிவு செய்து விட்டது.

கேள்வி: எதிரணித் தொழிற் சங்கங்கள் அனைத்தும் தோட்ட மறுசீரமைப்புக் குழுவுடன் இரண்டு முறைகள் கலந்துரையாடின. அதில், சம்பள உயர்வு, தொழில் நீடிப்பு, குடியிருப்பு தொடர்பாக பேசப்பட்டு இறுதியில் பேசப்படும் என்று தோட்ட மறுசீரமைப்புக்குழு உறுதியளித்தும் அது நடைபெறவில்லை. இந்த நிலையில், நீங்கள் இவ்வனைத்துப் பிரச்னைகளுக்கும் அரசுடன் பேசி தீர்வு கண்டுள்ளீர்களா? இன்னும் தீர்வு காணப்பட வேண்டியுள்ளதா?

பதில்: எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சில திட்டங்களை வகுத்து அவர்களிடம் 10, 12 அம் சங்களில் பேசியுள்ளோம். அந்த அடிப்படையில் தொடர்ந்தும் பேசுவோம். மற்ற சங்கங்களுடன், அரசு ஒரு முறைக்காக பேசுகின்றதே தவிர' அவர்கள் கோரிக்கைகளை தீவிரமாக கவனிப்பதில்லை. தாங்கள் இருக்கிறதாக காட்டிக்கொள்ள—ஜனாதிபதியை கண்டதாக காட்டிக்கொள்ள-பத்திரிகைகளை பிடித்துக்கொண்டு பிரச்சாரம் செய்துகொள்கிறார்கள். நாளொன்றுக்கு ரூ4/- வாங்கிக்கொடுத்தது தொடர்பாக, அன்று தினேஷ் பாராளுமன்றத்தில், ''தோட்டங்கள் நட்டமடைவதாக சொல்கின்றீர்கள், ஆனால் தொண்டமான் சொன்னபடி ரூ.4/- நாளொன்றுக்கு உயர்த்தியுள்ளீர்கள்.'' என்றார். எமக்கும் அரசுக்கும் இடையில்நிலவும் உறவும் சூழ்யும் மாறுபாடானவை.

கேள்வி: நீங்கள் இங்கு சொல்லியவைகளை தொடர்புச்சாதனங்கள் மூலம் வெளிப்படுத்தினால், இது தொடர்பாக தோட்ட மக்கள் மத்தியில் இருக்கும் சந்தேகம் அகலும் தானே?

பதில்: என் மீது திட்டமிட்டு துவேசத்தை உண்டாக்குவதற்கே, நான் செய்வது எதுவும் தோட்ட மக்களை திருப்திபடுத்துவதற்காக மட்டுமன்று என் மனதிருப்திக்காகவுமேதான். லட்சிய அடிப்படையிலேயே இயங்குவமேயொழிய அதற்கு முரணாக வெளியேபோய் பேப்பரில் போட்டுக்கொண்டிருந்தால், எதிர்க்கட்சியினர் சும்மாயிருக்க மாட்டார்கள். 24 ந்திகதி மொழியுரிமை தொடர்பான வழக்கில் ஆங்கிலத்தில் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று வந்தது. அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கில், வழக்காளி எனக்கு ஆங்கிலம் தெரியாது எனவே வழக்கு செல்லுபடியாகாது என வாதிட்டார். வழக்கறிஞர் பேசியும் தோற்றுப்போகும் நிலை உருவானது. காரணம், தொழிலாளியே துரைக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதியிருந்தார். மறு தரப்பினர் அக்கடிதத்தை தாக்கல் செய்து சம்பந்தப்பட்ட தொழிலாளிக்கு ஆங்கிலம் நன்கு தெரியும் என்றார்கள். வழக்கறிஞர் என்னை அணுகியபோது நான் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி, அட்டனி ஜெனரல் இவ்வாறு வாதிடக்கூடாது. இது அரசின் கொள்கைக்கு முரணானது. என்று குறிப்பிட்டுவிட்டு, அரசகரும மொழிகள் ஆணையாளரை இங்கு அழைத்து அவரிடம் சொன்னபோது அவர் கடிதம் எழுதி வழக்கை அழுத்தக்கூடாது என்று சொன்னார். நேற்று என்னை சந்தித்து வழக்கை சமாதானமாக தீர்த்துக்கொண்டதாக அறிவித்தார். இவைகள் பத்திரிகையில் வெளியாவதில்லை. நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும்போது, எதிரணியினர் ஸ்ட்ரைக் பண்ணுவார்கள். நம் முயற்சியினால் கிடைக்கும் நன்மையை தமது ஸ்ட்ரைக்கினால் கிடைத்தாக பிரச்சாரம் பண்ணுவார்கள்.

கேள்வி தற்போது தோட்டப்பகுதிகளில் சாதி அமைப்புகள் தலை தூக்கியுள்ளன, அதைப் பற்றிய தங்கள் கருத்தென்ன?

பதில்: அவர்களுக்கு வேறுவழியில்லை, பிழைக்கிறதுக்கு வேறு வழியில்லை. அதற்கு 'வீரகேசரி' இருக்கு. இந்திய ஹைகமிஷன் இருக்கு. யாரோ ஐயர் இருக்காராம் அவரைக் கூட்டிப் போனவுடன் இந்திய அரசாங்கம் ஆதரிக்கும். வீரகேசரிக்கு ஒரு அனுபந்தம் கொடுத்தால், பணத்திற்காக பிரசுரிக்கும். ஆள்கள் பெயர்கள் வீரகேசரியில் வந்து, இந்திய ஹைகமிஷனர் வந்தால், இது நிசமாயிருக்குமென ஆட்கள் நினைப்பார்கள். 50 வருட காங்கிரஸ் இருக்கு. செனட்டர் ஜேசுதாசன் என்ன சாதி? செனட்டரா வந்தது யார்? இன்றைக்கு சதாசிவம் மற்றும் காங்கிரஸில் பெரிய ஆளாகவிருப்பவர்கள் யார்? திறமைக்குத் தக்கவாறு வந்தாலும் யாருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படும். இந்த மாதிரி சொன்னால், இது முழுப் பூசனிக்காயையும் சோத்துக்குள் அமுக்குகிற மாதிரியேயாகும். உள்ளூர இருந்து செய்கிற அவன்களெல்லாம் காலக்கிரமத்தில் வெளிவந்துவிடுவான்கள்.

கேள்வி: இந்திய சமுதாயப் பேரவைக்கு நீங்கள் தலைவராயிருக்கின்றீர்கள் இப்பேரவைக்கும் உங்கள் அமைப்புக்கும் இடையிலான உறவு என்ன? ஏன் அதில் நீங்கள் தலைவராயிருக்கின்றீர்கள்?

பதில்: நமது சமூகத்தில் தொழிலாளர்கள், வர்த்தகர்கள் படித்தவர்கள் என்று இருக்கிறார்கள். காங்கிரஸ் ஆரம்பத்திலேயே இவர்கள் அனைவரும் இருந்தார்கள். காலக்கிரமத்தில் அவர்கள் ஒதுங்கி விட்டார்கள். தோட்டத் தொழிலாளி மட்டுமே மிஞ்சினான். இன்று மேல்மட்டத்தில் உள்ளவர்கள் நமது தலைமையின் கீழ் மேலும் உயர்வுடன் சமூகத்தின் பின் தங்கியவர்களுக்கும் உதவ முடியும் என உணர்கிறார்கள். இது அவர்களுக்கு ஒரு பாதுகாப்புக் குடையாகின்றது. அதேவேளை இருவரையும் ஒன்றிணைக்கும் வாய்ப்பு இருக்கின்றது. எனவே என்னை தலைவராக ஏற்றுநடக்கின்றார்கள் அவர்கள் உப தலைவர்களாயுள்ளார்கள். முன்னர் போன்று பதவிப் போட்டி இல்லை. என் அணுகு முறையை ஏற்றுக்கொள்கிறார்கள். இது அவர்களின் ஒத்துழைப்பைப் பெற உதவும்.

கேள்வி: ஸ்ரீ பாதக்கல்லூரியை முழுக்க முழுக்க மலையகத்துக்குரிய கல்லூரியாக மாற்ற முடியாதா?

பதில்: இன்று நாம் இலங்கையர்கள் நாம் பின் தங்கியவர்கள். எனவே, அத்தகைய விசேட வசதித் தேவையை அங்கீகரிக்கின்றோம். இதனாலேயே நாம் ஜெர்மானியர்களின் உதவியைவேண்டிப்பெற்றோம். ஆனால் துவேஷத்தின் காரணமாக, அதை மாற்றிவிட்டார்கள். சமீபத்தில் மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டார்கள். கொட்டகலைக்கு தற்செயலாக போனபோது, கேள்விப்பட்டு அங்கு நான் போனதால் நிலைமை தவிர்க்கப்பட்டது. 3 நாட்கள் பிந்தியிருந்தால் நிலைமை முற்றிலும் வேறாயிருந்திருக்கும். இன்னும் சில பிரச்சினைகள் உள. தொண்டமான் சொல்பவைகளை துவேஷக் கண்கொண்டு பார்ப்பவர்கள், எமது பின் தங்கிய நிலையைப் ஏற்றுக்கொள்வதில்லை. நாம் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளதைப் போன்று காட்டுகின்றார்கள்.

கேள்வி: மலையகப் பட்டதாரிகள் கண்டி, நுவரெலியப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வெளி மாகாணங்களிலிருந்து இங்கு வரமுடியாதிருக்கின்றனர். இப்பிரச்சினைக்குஎவ்வாறு தீர்வு காண விரும்புகிறீர்கள்? அல்லது மலையகத்துக்கென தனித்துவமான முறையொன்றை யோசிக்கின்றீர்களா?

பதில்: யார், யாருக்கு எந்தெந்த சூழ்நிலையில் முடியுமோ, பாகுபாடற்ற முறையில் உதவுவோம். தொழில் நுட்பப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திற்கு போகும்படி சொன்னதை மாற்றவைத்தேன். வட இலங்கை மருத்துவக் கல்லூரி தொடர்பான விடயத்திலும் நான் உதவினேன் தோட்டப் பகுதி மக்களுக்கு விசேடமாகவும்; சிங்கள மற்றும் அனைத்து மக்களுக்கும் ஏன் துரைமாருக்குகூட உதவியுள்ளோம்

கேள்வி: இ.தொ.கா.வில் ஒரு லட்சத்திற்கு அதிகமாக சிங்கள மக்கள் இருக்கின்றனர் எனக் கூறினீர்கள். பெரும்பாலான சிங்கள மக்கள் கிராமங்களிலிருந்தே வருகின்றனர். விவசாய காலத்திலும், வேறு நிலைகளிலும்கூட தோட்டவேலைக்கு இவர்கள் ஒழுங்காக வராமை தோட்டத்துறையின் நட்டத்துக்கு ஒரு காரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது, புதிய கம்பெனிகள் இக்காரணங்களினால் கிராமியத் தொழிலாளர்களை வேலை நீக்க முயலலாம்?

பதில்: இதுதோட்டத்துறையில்மட்டுமல்ல பொலன்னறுவ நெசில்ஸ் நிறுவனம் கூட இப்பிரச்சினையை எதிர்நோக்கியது. விவசாயிகள் விவசாய நடவடிக்கைக்குத்தான் முன்னுரிமை அளிப்பார்கள் சில பிரச்சினைகள் எழத்தான் செய்யும்

★

## ஓ... விண் மீன்களே!

தொலை தூரப்
பறவையாக இருந்தாலும்
உன்
காலடிச் சுவடுகளை
என் விழிகளால்
விளித்துக்கொண்டே
இருப்பேன்
உன்
வெளிச்ச நரம்புகள்
என்னை
மீட்டுவதாக
உணர்கிறேன்

அ. தனலெட்சுமி

## வறுமை

நாங்கள்
வெறும்
வயிற்றுடன்
படுப்பதில்லை
வயிறு நிரம்ப
பசியுடன்தான்

ஜோ. பரஞ்சோதி

# ஏன்? எதற்கு? எப்படி?

★ இளம் வயதில் முடி வெள்ளை ஆவதற்கு காரணம் என்ன?

(1) முடிக்கு நிறத்தை கொடுக்கும் நிரமிப் பொருள் **(MELANINE)** குறைப்பாட்டினால் இருந்தால் முடி வெள்ளை ஆகும்.

(2) ஹார்மோன்கள் சமநிலை இல்லாமல் முடி வெள்ளை ஆகும்.

(3) சத்துள்ளஉணவுப்பொருள்களை எடுத்துக் கொள்ளவில்லையென்றால் முடி வெள்ளையாகும்.

★ கொட்டாவி, ஏப்பம், விக்கல், பொறை இருமல் வருவதேன்?

கொட்டாவி:- நமக்கு களைப்பு ஏற்படும்போதும் மூளை சோர்வடையும்போதும் நமக்கு அறிவிக்கும் செயல்.

ஏப்பம்: நாம் உண்ட உணவில் அதிகப்படியான புரதப் பொருட்கள் இருந்தாலும், புளிப்புப் பொருட்கள் இருந்தாலும் இவற்றை சிதைக்கும் பொழுது ஏற்படும் வாயுவை வெளியேற்றும் ஒரு செயல்

விக்கல்: உதர விதான சரிவர சுருங்கி விரிந்து செயல்பட முடியாதுபோக ஏற்படும் ஒரு சுவாச சிக்கல்.

பொறை: உணவுப் பாதையில் செல்லவேண்டிய உணவுப் பருக்கைகள் சுவாசப்பாதையில் நுழைந்து பாதை மாறியதால் வரும் விளைவு.

இருமல்: சுவாசப்பாதையில் ஏற்படும் ஒருவித உறுத்தல் இருமலாக வருகிறது.

★ டாக்டர் நம் உடம்பைச் சோதனை செய்யும்போது நாடித்துடிப்பைப் பார்க்கிறார். தொண்டையில் பாட்டரி விளக்கு அடித்து பார்க்கிறார். கண்ணைப் பார்க்கிறார். இவற்றில் என்ன செய்தி அவருக்கு கிடைக்கிறது.

இதய துடிப்பின் ஒலி மற்றும் அளவை அதிர்வெண்ணை நாடித்துடிப்பில் அறிந்துகொள்ளலாம். தொண்டையில் பெட்டரி விளக்கு அடித்துப்பார்ப்பது—உள் நாக்கிற்கு அருகில் இரண்டு புறமும் ஒரு சிறிய சுரப்பி உண்டு. இதற்கு **(TONSIL)** என்று பெயர். இது அடிக்கடி தொற்றுக் கிருமிகளால் பாதிக்கப்பட்டு செந்நிறமாற் தோன்றும். இதைச் சோதனை செய்ய நாக்கை நீட்ட சொல்கிறார்.

நாக்கானது நம் உடல் உள் உறுப்புகளின் கண்ணாடி உடல் உள்ளுறுப்பு குறிப்பாக உணவுமண்டலத்தில் ஏதேனும் கோளாறு இருந்தால் நாக்கின் நிறம் மாறி இருக்கும்.


கண்ணும் கண் இமைகளையும் சோதிப்பது கண் இமைகளின் உட்புறம் அதிக இரத்த தங்கிகள் காணப்படுகின்றன. இவற்றைப்பர்ர்த்து உடலில் இரத்த ஓட்டம் எவ்வாறு நடைபெறுகிறது என்று அறிந்துகொள்ளலாம்.

★ பேன்கள் மூலம் உடலுக்கு பரவும் நோய்?

தலைப்பகுதியில் அரிப்பையும் சில சமயங்களில் தோல் தொற்றையும் நிரை நீர் முடிச்சுகளில் வீக்கத்தையும் பேன்கள் ஏற்படுத்துகின்றன. மனிதனை தாக்கும் பேன் சிலவகை காய்சலை பரப்புகின்றன. அடை டைப்பாய்டு காய்ச்சல், அகழிக் காய்ச்சல், **(TRENCH FEVER)** திரும்ப வரும் காய்ச்சல் **(RELAPSING FEVER)** போன்றவை ஆகும்.

நன்றி 'துளிர்'
(அறிவியல் சஞ்சிகை)

**தோட்டத்துறை தனியார்மயம் தொடர்பாக ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவரும், தோட்டத்துறை தொழிற்சங்க கூட்டுக்குழுவின் அமைப்பாளருமான திரு. எஸ். நடேசன் 18. 3. 92 அன்று அளித்த ஆங்கிலப் பேட்டியின் தமிழாக்கம்**



தோட்டத்துறை தனியார்மயம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகிய இரு சர்வதேச நிதிநிறுவனங்களினால் வலியுறுத்தப்பட்டது. அரசு அந்த் சிபாரிசை அமுலாக்க நடவடிக்கைகளை அறிமுகப் படுத்தியுள்ளது. அந்தக் கண்ணோட்டத்தில் நாங்கள் (தோட்டத்துறை தொழிற் சங்கங்கள்) தனியார் மயத்தை எதிர்க்கின்றோம்.

கேள்வி: ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரும், தோட்டத்துறை தொழிற்சங்கக் கூட்டுக் குழுவின் அமைப்பாளரும் என்ற முறையில் தற்போதைய தோட்டத்துறை தனியார் மயம் தொடர்பாக தங்கள் கருத்தென்ன?

பதில்: மொத்தத்தில் தோட்டத்துறை தனியார்மயம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகிய இரு சர்வதேச நிதி நிறுவனங்களினால் வலியுறுத்தப்பட்டது. அரசு அந்த சிபாரிசை அமுலாக்க நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தக் கண்ணோட்டத்தில் நாங்கள் (தோ. து. தொ. சங்கங்கள்) தனியார் மயத்தை எதிர்க்கின்றோம். தனியார்துறையில் நம் நாட்டின் தனியார் நிறுவனங்களினால், தனியாரால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் தொழிலாளர்கள் அரச தோட்டத்தொழிலாளர்களிலும் பார்க்க 4 ரூபா, 5 ரூபா குறைவான சம்பளம் பெறுகிறார்கள். (ஜனவசம, இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தோட்டங்களில் 5 ரூபா தரப்படுகின்றது.) தனியார் தோட்டங்களில் குறைந்த நாட்கள் வேலையே தரப்படுகின்றது. தனியார்மயம் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிக நன்மைகளை விட கேடுகளையே விளைவிக்கும் என்பதை இது தெளிவாக்குகின்றது. எனவே தனியார்மயத்தை எதிர்க்கின்றோம்.

## பேட்டி கண்டவர்: பெ. முத்துலிங்கம்

கேள்வி: அரசு நல்ல வேலை நியதிகள், சம்பளம் அதிக வேலை நாட்களை உறுதி செய்தால், தனியார்மயத்தை ஏற்றுக்கொள்வீர்களா?

பதில்: கொள்கை அடிப்படையில் நாம் தனியார் மயத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. தனது தனியார் மயக்கொள்கையின் அடிப்படையில் அரசு நடைமுறைகளை மேற்கொண்டபோது, நாம் (தோ. தொ. கூ. கு.) ஆட்சேபனை தெரிவித்தது. டன், அரச சார்பு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய அரசைக்கோரினோம். இதன் பிறகே திறைசேரி செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் எமது குழுவிலுள்ள 14 தோட்டத்தொழிற்சங்கங்களுடன் தொழிற்சங்க, தொழிலாளர் உரிமைகள், உறுதி தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினார். ஒரு வாரத்தின் பின்னர் தோட்டத்தொழிற்துறை அமைச்சரும் கூட்டுக்குழுவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். நாங்கள் கூறியவைகளை செவிமடுத்த அமைச்சு தொழிலாளர் சேமநலன்கள், தொழிற்சங்க உரிமைகள் தோட்டத் தொழிற்துறை அபிவிருத்தி உள்ளிட்ட 9 அம்ச திட்டமொன்றை முன்வைத்தது. அமைச்சின் யோசனைகளை ஆராய்ந்து கூட்டுக்குழு தனது கருத்துக்களுடன் 12 அம்ச கோரிக்கை ஒன்றை முன்வைத்தது. பேச்சுவார்த்தையின்போது, புதிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் தொழிலாளர் பிரச்னைகள் தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்றுக்கு வழிசெய்ய அமைச்சு வாக்குறுதி அளித்தது குறிப்பிடற்பாலது. எனினும் இதுவரை எதுவும் நடைபெறவில்லை. எழுத்து, வாய்மூல உறுதி

கள் தொடர்பாக எதுவும் அறிந்துகொள்ளாத நிலையில் தொழிற்சங்கங்கள் அதிருப்தி அடைந்துள்ளன.

கேள்வி; உங்கள் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்கள் இயங்கும் புசல்லாவைப் பகுதியில் ஏலவே சில தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு தொழிலாளர் பிரச்னைகள் சம்பந்தமாக எதுவும் கூறமுடியுமா?

பதில், இது முக்கிய நடைமுறை ரீதியான கேள்வி. அங்கு போமண்ட், ரொத்சைல்ட், சோகம தோட்டங்களை அரசு பெரிய நிறுவனமான ஹரிசன் அன் குரொஸ்பீல்டுக்கு கையளித்தது. லாபத்தில் 10 சத விகிதத்தை தொழிலாளர் சமூக் நலன்களுக்கு ஒதுக்க உறுதியளித்துள்ள அந்த நிறுவனம், எமது சங்கம் உள்ளிட்ட, அங்கு இயங்கும் தொழிற்சங்கங்களை அழைத்து பேசியுள்ளது. இதுவரை பிரதி விளைவுகள் இல்லை. எனினும் இனியும் இராது என்று சொல்வதற்கில்லை. எனவே தோட்டத்துறை தொழிற்சங்கக் கூட்டுக்குழு, தோட்டத்துறை மறுசீரமைப்புக் குழுத் தலைவர் திரு. பாஸ்கரலிங்கத்திற்கும் பெருந்தோட்டத்துறை அமைச்சருக்கும் எழுதி, வாக்குறுதியளிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தம் ஒன்றுக்கு வழிசெய்வதைத் தவிர்த்து, அரசு தோட்டங்களை தனியாரிடம் கையளிக்கும் நடவ்டிக்கையில் ஈடுபட்டுள்ளதை சுட்டிக் காட்டியுள்ளது. ஏலவே பதிவுசெய்துள்ள எமது ஆட்சேபனையையும் அதற்கு பதில் இல்லாமையையும் சுட்டிக்காட்டியுள்ளது. தொழிற்சங்கங்கள் (குறிப்பாக தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டவை) மத்தியில் அதிருப்தியும் கவலையும் ஏற்பட்டுள்ளன.

கேள்வி: நீங்கள் முன்வைத்ததாகச் சொல்லிய கோரிக்கைகள், ஆலோசனைக்ள் என்ன என்பதை சுருக்கமாகச் சொல்வீர்களா?

பதில்; முக்கியமானது தொழிலாளர் உரிமைகள், சட்டரீதியான கொடுப்பனவுகள், இன்றைய தொழிலாளர் உரிமைக்ள், சமூக நலன் நடவடிக்கைகள் தொடர்வதுடன் மேம்படுத்தப்பட வேண்டுமென நாம் வலியுறுத்தினோம். இந்தியாவிலிருக்கும் தோட்டத்துறை சட்டத்தைப் போன்று இவ்வுரிமைகளுடன் தோட்டத்தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளின் நீடிப்பை உறுதிசெய்ய பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படவேண்டும் என கோரியமை முக்கியமானது. இது தனது நலன்களுக்கமைவாக-தாம் விரும்பிய விதத்தில் விரும்பிய நேரத்தில் இவ்வுரிமைகளை பறிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதினின்றும் தனியார் நிறுனங்களைத் தடுக்கும். இது மேலும் தோட்டங்களை தனியாருக்கு, தனியார் நிறுனங்களுக்கு கையளிக்கும் முன்னர் அரசை சிந்திக்கவைக்கும் என நாம் நம்புகிறோம்

கேள்வி; இதற்காகவேயா நீங்கள் 30-3-92 அன்று ஒருநாள் எதிர்ப்பு அடையாள வேலை நிறுத்தத்தை நடாத்த முடிவுசெய்துள்ளீர்கள்?

பதில்; உத்தேச வேலை நிறுத்த முடிவு இரு அம்சங்களை உள்ளடக்கியது. ஒன்று தொழிலாளர் சம்பளம். இதில் அரசு ஒரு பாரபட்சமான கொள்கையை பின்பற்றியுள்ளது. கடந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் பிரதம அமைச்சரும் நிதியமைச்சருமான கௌரவ டி. பி. விஜயதுங்க அனைத்து அரச ஊழியர்களுக்கும் மாதம் 100 ரூபா சம்பள உயர்வை அறிவித்தார். இது தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படவில்லை. நாம் இப்பாரபட்சம் அகற்றப்பட்டு தோட்டத்தொழிலாளருக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமென்று கோரினோம். அடுத்தது 1983 ல் சம்பள நிர்ணய சபையில் அறிவிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் புள்ளி 6 சதம். இதுவரை இது தரப்படவில்லை. இது அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து தரப்படவேண்டுமெனக்கோருகின்றோம்.) அடுத்தது தோட்டத் தொழிற்சங்க- தோட்டத்துறை புதிய நிர்வாக கூட்டு ஒப்பந்தத்தை ஒழுங்கு செய்யும் பேச்சுவார்த்தையை தொடர அரசு தவறியமை. எனவே எமது மார்ச் 30 வேலை நிறுத்தம் எமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகவே. இது வெற்றிக்ரமாயமையும் என நம்புகின்றோம். தோட்ட சிப்பந்திகள் சங்கமும் எம்முடன் இருக்கின்றது. அவர்க்ள் பிரச்னைகளும் இருக்கின்றன. அவர்களுடன் இணைந்து செய்யும் வேலைநிறுத்தத்தில் சம்பள உயர்வை வெற்றிகரமாக வலியுறுத்தும் நம்பிக்கையுடன் நாம் இருக்கின்றோம்

கேள்வி: தோட்டத்துறை தனியார் மயத்திலிருந்து எழும் பிரச்னைக்ள் தொடர்பான பேச்சுவார்த்தையை அரசிடம் கோருவதில் அரசு சார்பு தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் உங்களுடன் நின்றதாக நீங்கள் தெரிவித்தீர்கள் 30 மார்ச் வேலைநிறுத்தத்திலும் அவர்கள் உங்களை ஆதரிப்பார்களா?

பதில்: நான் சந்தேகிக்கின்றேன். அந்த சங்க உத்தியோகத்தர்களுடன் நான் பேசியபோது அவர்களின் போக்கு சாதகமாக இருக்கவில்லை. எமது சக்தியை ஒன்று திரட்டி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தினர்களையும் வேலை நிறுத்தத்திற்குள் கொண்டுவர வேண்டும்

கேள்வி; சில அரச சார்பு தொழிற்சங்கங்களினதும் அரச தொழிற்சங்கங்க்ளினதும் தலைவர்கள் ஜனவரி (1992) தொடக்கம் தோட்டத் தொழி

லாளர்களுக்கு சம்பள உயர்வு தரப்பட்டுள்ள தாக அறிவித்துள்ளார்களே, இதுதொடர்பான உங்கள் கருத்தென்ன?

பதில்: நான் முன்னர் கூறியதைப்போல 1992/93 வரவு செலவு திட்டத்தில் ஏனைய துறைகளில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு வழங்கிய சம்பள உயர்வை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்காததன் மூலம் அரசு பாரபட்சமாக நடந்துள்ளது. நாம் இந்த 100 ரூபாவை தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப் படவேண்டுமெனக் கேட்டோம். ஆனால் தோட்டத்தொழிற்துறை அமைச்சோ பிரதம அமைச்சரோ, தொழில் அமைச்சரோ எதுவும் செய்யவில்லை. பாராளுமன்றத்தில், (100 ரூபா வழங்கப்படும் என) சில தொழிற்சங்கத் தலைவர்கள் அறிவித்துள்ள போதிலும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதை நாங்க்ள் ஆட்சேபிக்க முடிவு செய்துள்ளோம். நாம் கோருவது நாளொன்றுக்கு 4/ -ரூபா அல்ல, 100 ரூபா. இந்த அடையாள வேலை நிறுத்தத்தின் மூலம் அரசை நிர்ப்பந்திப்போம்

கேள்வி: சில அரசு சார்பு தொழிற்சங்கத் தலைவர்கள், தனியார்மயத்தின் பின்னர் சில (குடியிருப்புபோன்ற) அவசரத் தீர்வுக்குரிய பிரச்னைகள் ஒன்றில்உடனடியாகத் தீர்ந்துவிடும் அல்லது தீர்க்கப்படக்கூடிய வாய்ப்புக்ள் அதிகரிக்கும் என்று சொல்லியுள்ளார்கள், இது சாத்தியம் என நீங்கள் க்ருதுகின்றீர்களா?

பதில்: நான் சொல்லக் கூடியதெல்லாம், சில அரசு சார்புத் தொழிற்சங்கத் தலைவர்களும் தோட்ட உரிமையாளர்களாயிருக்கின்றார்கள். எனவே, என்னையும் இன்னும் சிலரையும் போல அவர்கள் தொழிலாளர் பிரச்னைகளில் உண்மையில் கரிசனையுள்ளவர்களாயிருப்பார்கள் என்று கருத முடியாது. நம் நாட்டின் தனியார் தோட்டங்களில் தொழிலாளர் குடியிருப்புகள் அரச தோட்டங்களில் இருப்பனவற்றை விட மிக மோசமாகவிருக்கின்றன. இந்நிலையில் தனியார்மயப்படுத்தலின் பின்னர் குடியிருப்பு நிலைமை சீரடையும் என எவ்வாறு கொள்ள முடியும்? இது கேள்விக்குரியதே மேலும் இன்று 5 லட்சத்திற்கான தொழிலாளர்கள் அரச தோட்டங்களில் இருக்கின்றார்கள். தொழில் செய்கின்றார்கள். அரச நிதி உதவியுடன் அவர்கள் குடியிருப்புகளை அமைத்துக்கொள்ள, காய்கறித் தோட்டங்களை வைத்துக்கொள்ள அரசினால் முடியவில்லை. எனும்போது, தனியார் மயத்தின் பின்னர், இது எவ்வாறு முடியும்? நிலைமை மேலும் மோசமடையும் – சிக்கலடையும். அரசுடைமையின் கீழ் வீட்டிற்கும் காய்கறி தோட்டத்திற்கும் நில ஒதுக்கீடு செய்ய முடியாதெனின், தனியார் மயமாக்கப்பட்ட பின் இது எவ்வாறு முடியும்?

கேள்வி: அரச உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரு நிறுவனங்க்ளின் கட்டளைக்ளையே நிறைவேற்றுகின்றது என நீங்கள் கூறினீர்கள். தனியார்மயப்படுத்தல் தொடர்பாக இக்கட்டளைக்ளை அரசு நிறைவேற்றத் தவறினால் தோட்டத்துறை உள்ளிட்ட அனைத்து சமூக சேவைகள் அபிவிருத்தித் திட்டங்க்ளையும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

பதில்: அரச நிறுவனங்களின் கீழும் அபிவிருத்திக்கான பெரும் நிதிவ்ழங்கல் எதுவும் இடம்பெறவில்லை. பாடசாலை கட்டிட அமைப்பு, குடியிருப்பு சமூக சேவை மேம்பாடு அபிவிருத்தி பணிகளுக்காக தோட்டத்துறைக்கு வழங்கப்பட்ட நிதியம் அப்பணிகளுக்காக செலவிடப்படவில்லை. நிதிதிருப்பி அனுப்பப்பட்டுவிட்டது. சிரமத்தில் இருக்கும் நிலையில் அரசு புதிய வ்ழிக்ளை கையாளும் எனக் க்ருதமுடியாது. தனியார்மயப்படுத்தலை தாமதிக்காது; நிறுத்தாது. அதே வேளை, அரசு பெருந்தோட்டங்களை ்ெ நிர்வாகத்தை மட்டுமே 'தனியார்மயப்படுத்துவ தாக அறிவித்துள்ளதை க்வனிக்கவேண்டும். ஊழல், நிர்வாக சீர்குலைவு, உறவினர்க்ளின் தலையீடு, அரச தலையீடு இவைகள் பெருந்தோட்டத்துறையில் மலிந்திருந்தமையை நாட்டில் அனைவரும் அறிவர் என அரசு சொல்கின்றது. எனினும் நடைமுறையில், கடந்த சில ஆண்டுகளில் குறைபாடுகள், ஊழல்கள், விரயங்களுக்கு மத்தியில் 1990 தொடக்கம் பல்வேறு வரிகளின்மூலமாக் தோட்டங்களிலிருந்து அரசு பத்து லட்ச ரூபாய்க்ளை பெறமுடிந்துள்ளது. தேயிலை மீது 1.100 மில்லியன் ரூபாவைப் பெற்றதுடன் ரப்பர் பயிர்ச் செய்கை அபிவிருத்திக்காகவும் காசு செலவிடப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் தோட்டத்துறை மீதான வீண் சுமைகள். இவைகள் அகற்றப்படவேண்டுமென நாம் கருதுகின்றோம். ஒரு துறை நட்டத்தில் இயங்கும்போது, அதன் மீது மேலும் மேலும் வரிகள் சுமத்துவது எவ்வாறு? ஒருமுறை உருப்படியாக் -லாபக்ரமாக இயங்க் வேண்டுமெனின் அனாவசியமான வரிகள் நீக்கப்படவேண்டும். நேற்றைய 'டெய்லி நியூஸ்' பேப்பரில் கண்டுள்ளபடி 1990 ல் 2.5 மில்லியன்ரூபாய்கள் லாபக்ரமாக பெற்றுள்ளதாக் அறிவித்துள்ளார்கள். மறுபுறம் வரியாக் 2.1/8 மில்லியன் தரப்பட்டுள்ளதாம்.

இதிலிருந்து தோட்டத்துறையினால் ஈட்டப்படும் லாபம் ஏனைய அரச செலவுகளுக்காக அடித்துச் செல்லப்படுவது தெரிகின்றது. எனவே தோட்டத் துறையைப் பாதுகாப்பதெனின் இவ்வனாவசிய வரிகள் நீக்கப்படல் வேண்டும்.

கேள்வி: அரசு வரிகளை தள்ளுபடி செய்தால் தோட்டங்கள் லாபகரமாக இயங்கும் என்பது அர்த்தமா?

பதில்: தோட்டத்துறை அபிவிருத்தியில் அரசு உண்மையான நாட்டம் கொண்டிருந்தால், லாபகரமாக இயங்கி, தன்னிறைவு பெற்று, நாட்டின் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்கும் உதவக் கூடிய சக்திபெறும் வரை அவ்வாறான வரிகளை நீக்கவேண்டும். உலகின் எந்த நாட்டிலுமே, சிரமத்திலிருக்கும் தொழிற்துறை வரிச்சுமைக்கு ஆளாக்கப்படுவதில்லை.

கேள்வி: அது மட்டுமா?

பதில்: அதுமட்டுமன்று. அது பல காரணங்களுள் ஒன்று. ஊழல், நிர்வாகச் சீர்கேடு, விரயம் இவைகளை களைவது மட்டுமன்றி அரசு இந்த வரிகளை அகற்றுவதிலும் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும். மேலும் தனியார் மயப்படுத்தலின் பின்னரும் இன்று அரசுடைமையாயிருக்கும் தோட்டநிர்வாகிகளே தொடர்வார்கள் எனும்போது, எவ்வாறு பாரிய நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கமுடியும்? நிலைமை சீரடையவேண்டுமெனின், அரச நிறுவனங்களில் அடிப்படை நிர்வாக மாற்றங்கள் தேவை. இப்போது தனியார் தோட்டங்கள் லாபமீட்டுவதாகச் சொல்லிக்கொள்கின்றார்கள். கூர்ந்து கவனித்தால் தனியார் தோட்டங்களினால் விற்கப்படும் தேயிலையும்கூட அரச தோட்டங்களில் களவாடப்பட்டதென்பதை அறியலாம். தனியார் தோட்டங்களில் தனியார் சிறப்பு உற்பத்தி அதிகரிப்பு நடைமுறைகள் இல்லை.

கேள்வி: நிர்வாக மாற்றமின்றி சீர்கேடுகளை களையலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?

பதில்: நிச்சயமாக மாற்றத்திற்கான அடிப்படைத் தேவை இருக்கின்றது. நேரடியாக 10,00000த்திற்கு அதிகமானோர் நேரடியாகவும் இன்னும் ஒரு 10,00000 பேர் மறைமுகமாகவும் தொழிலில் ஈடுபட்டுள்ள நாட்டின் முக்கிய தொழிற்துறை என்ற அடிப்படையில் அரசு அதன் அணுகுமுறையை வகுக்க வேண்டும். நிர்வாகத்திற்கு உதவி, தோட்டத்துறையை அபிவிருத்தி அடையச்செய்து தொழிலாளர் நலன் காக்க முன்வரவேண்டும்

கேள்வி: அடையாள வேலைநிறுத்தத்தின் நிர்ப்பந்தத்திற்கு அரசு பணிய மறுத்தால் உங்கள் அடுத்த நடவடிக்கை எவ்வாறிருக்கும்?

பதில்: முன்னர் கூறியதைப் போன்று கூட்டு ஒப்பந்தத்திற்கு வழிசெய்ய அரசு தவறியமையை எதிர்ப்பதே அடையாள வேலை நிறுத்தம். நாம் (கூட்டுக்குழு) மீண்டும் கூடி இவ்வழியில் அரசை நிர்ப்பந்திக்கும் வழிவகைகளை ஆராய்ந்து முடிவு செய்வோம்.

கேள்வி: கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று தொழிலாளர் - அரசுடைமையின் கீழ் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் தொடர்ந்து அனுபவிக்க அனுமதிக்கப்படுவார்கள் என நினைக்கின்றீர்களா?

பதில்; வாக்குறுதியளிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தம் எட்டப்பட்டால் அது தொழிலாளர்-தொழிற்சங்க உரிமைகள் தொடர்ச்சியை உறுதிசெய்யும் என நாம் நம்புகின்றோம். அன்றேல் தொழிலாளர் -தொழிற்சங்க நிலை மிக மோசமடையும்.

கேள்வி: ஏலவே, பல அரச யாக்கங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டுவிட்டன. அவ்வாறு தனியார் மயப்படுத்தப்பட்ட சமயங்களில் கூட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. தொழிலாளர் உரிமைகள் உறுதி செய்யப்பட்டும் கூட தொழிலாளர் அனுபவித்த அனைத்து உரிமைகளும் மீறப்பட்டு பறிக்கப்பட்டுள்ளனவே, அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: கூட்டு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டாலும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் கூட்டு ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்துகொள்வதில் விழிப்பாயிருக்கவேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் விழிப்புடனிராவிடின் அங்கும் இந்நிலை ஏற்படும்.

## தமிழில் தொலைக்காட்சி பயிற்சி நெறி

பொதுசன தொடர்பு சாதனங்களில் சக்தி வாய்ந்த சாதனமாக தொலைக்காட்சி திகழ்கிறது. தமிழ்மொழியில் முதன்முறையாக தொலைக்காட்சி பயிற்சி வகுப்பு ஒன்றை கண்டி சத்தியோதய நிறுவனம் நடத்தவிருக்கின்றது. மூன்றுமாத கால பயிற்சிநெறி ஒவ்வொருவாரமும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

நடிப்பு, கமிரா, நெறியாள்கை, கதை, வசனம் எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படவிருக்கின்றன. இந்த பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் 'தொலைக்காட்சி பயிற்சி நெறி', திரு. மில்டன் பெரேரா, சத்தியோதயா, 30, புஸ்பதான மாவத்த, கண்டி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்

# தோட்ட நிர்வாகம் தனியார் மயப்படுத்தல் தொடர்பாக நவசமசமாஜக்கட்சி பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அளித்த பேட்டி



**அரச சட்டத்தை மீறி நடக்கும் நிர்வாகத்தை அறிமுகப்படுத்த விழைகின்றது. இதனாலேயே தனியார் மயத்தின் பின்னர் தொழிலாளர் உரிமைகள் பாதிக்கப்படும் என நாம் அஞ்சுகின்றோம்.**

கேள்வி: தோட்டத்துறை தனியார் மயத்தை எதிர்த்து உங்கள் கட்சி ஜனவசம, அபெகூஸ் தோட்டச் சிப்பந்திகளின் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தது. ஏன்?

பதில்: நாங்கள் தனியார் மயப்படுத்தலை எதிர்க்கிறோம். காரணம், இது எமது அங்கத்தினர்களை பாதிக்கும்; தொழிலாளர் உரிமைகள் பறிபோக வழி வகுக்கும்; சுரண்டலுக்கு வழி செய்யும்; பெரும்பாலான உத்தியோகஸ்தர்களும் தொழிலாளர்களும் வேலை இழப்பர். 200,000 த்திற்கு அதிகமானோர் வேலை இழப்பர். இந்த காரணங்களினால் ஆரம்ப முதலே எமது சங்கம் தனியார் மயத்தை எதிர்க்கு வந்துள்ளது. தோட்டத்துறையின் பிரச்சினை நிர்வாக ரீதியினாலன்று; அரசின் கொள்கையினாலேயே. இதனால் ஏற்பட்டுள்ள உற்பத்திச் செலவு உயர்வை நல்ல பொருளாதாரத் திட்டத்தினால் குறைக்கிருக்க முடியும். எனவே, இந்த தனியார் மயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடாத்தினோம்.

கேள்வி: தனியார் மயம் தொழிலாளர் உரிமை இழப்பிற்கும் ஆட்சுழிப்பிற்கும் வழி செய்யும் என்று சொன்னீர்கள். ஆனால், அண்மையில் அரசு ஆட்சுழிப்பு இடம் பெறாது என்பதுடன் தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

பதில்: அமைச்சுடன் நான் பேசிய போது, தோட்டத்துறையை ஏன் தனியார் மயப்படுத்த வேண்டும் என கேட்டேன். அவர்கள், தோட்டங்கள் கையளிக்கப்பட மாட்டா-நிர்வாகம் மட்டுமே என பதிலளித்தனர். இது ஏன் என வினவிய போது, அவர்கள் தற்போது நிர்வாகம் அரச அதிகாரிகளின் சட்ட விதிகளுக்கேற்ப செயல்பட வேண்டியிருக்கின்றது. இதனால், பல்வேறு தொழில்களுக்கு பல்வேறு சம்பள முறையை நடைமுறைப்படுத்த முடியாதிருக்கின்றது. இதன்மூலம் அவர்கள் வலியுறுத்தியது ஒரு சட்ட விதிகளை மீறும் ஒரு நிர்வாக அமைப்பு தேவை என்பதையே. அத்துடன் தனியார் நிர்வாகம் அத்தகைய சட்ட விரோதமான நடவடிக்கைகளை துணிந்து மேற்கொள்ளும் என்பது அவர்களின் நம்பிக்கை. இது எதேச்சாதிகார நிலை.

இன்று நாட்டில் இரண்டு விதமான போலிஸ் இயங்குகின்றன. ஒன்று சட்ட பூர்வமாக – சீருடையில் இயங்குவது. அது நாட்டின் சட்டத்திற்கமைய இயங்குவது. மற்றது சட்டபூர்வமற்றது. அவர்கள் திருட்டுத்தனமாக வீடுகளுக்குள் நுழைந்து மக்களை தூக்கிச் செல்பவர்கள். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள், செய்யும் கைதுகள் பதிவு செய்யப்படுவதில்லை. அவர்கள் வழங்கும் தண்டனைகளும் அவ்வாறானவையே. இங்கும் அதே நிலைதான். இரு நிர்வாகங்கள்: ஒன்று, சட்டங்களை மதித்து அதற்கு அமைய நடப்பது. மற்றது சட்டத்தை அவமதித்து நடப்பது.

ஆட்கழிப்பு தொடர்பாக அரசு தொழிலாளர் (தமிழ்த் தொழிலாளர்) மத்தியில் மட்டுமின்றி உத்தியோகத்தர்களிலும் தேவைக்கதிகமானோர் இருப்பதாக சொல்கின்றது. தனியார் மயத்திற்கு சாதகமாக முன் வைக்கப்படும் காரணங்களுள் ஒன்று, ஏக்கர் அடிப்படையில் தொழிலாளர் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பது. தனியார் மயத்தின் பின்னர் தோட்டத் தொழிலாளர்கள் எண்ணிக்கை 50% அல்லது 1/3 விகிதம் குறையும். இது ஒரு பாரிய ஆட்குறைப்பாகும். இக்குறைப்பு தேவைக்கதிகமான ஆட்கள் இருப்பதையே குறிக்கும்.

இவ்வாறு குறைக்கப்படுபவர்கள் வேறு ஏதாவது தொழிலை தேடிக்கொள்ள வேண்டும். இது தோட்

டத்துறைக்கு வெளியே தான். ஏலவே, இவ்வாறு குறைக்கப்படுபவர்களை என்ன செய்வது என்பது பற்றிய முடிவு ஒன்று எம்மிடம் உள்ளது. இவர்கள் வதியும் இடங்கள் தோட்ட நிர்வாகத் துறைக்கு வெளியே-கிராமிய அடிப்படையில் அமைய வேண்டும் அவர்கள் வதிவிடங்கள் காலனி முறையில் தோட்ட நிர்வாகத்தின் செல்வாக்குப் பிராந்தியத்திற்கு வெளியே இருக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. இது இந்த இந்திய தமிழ்த்தொழிலாளர்களின் (நாம் அவர்களை அழைப்பது கண்டியத் தமிழர்கள் என) பாரம்பரிய உரிமைகளை அபகரிப்பதாகும்.

பல தலைமுறைகள் உழைப்பினால் அவர்களுக்கு உரித்தான தொழில்: நிர்வாகத்திடம் வலியுறுத்திப் பெறும், சுகவியல், சமூக நலன், கல்வி. தோட்டங்களிலும் கிராமங்களிலும் வதியும், தொழில் முன்னுரிமைகள் தொடர்பான உரிமைகள் இவற்றுள் அடங்கும். இப்பொழுது அவைகளனைத்தையும் கேலிக்கூத்தாக்கி விட்டு, இத் தொழிலாளர்களை தோட்டங்களிலிருந்து வெளியேற்றி கண்டிப் பகுதிகளில் நிலமற்ற விவசாயிகளின் நிலையில் வைத்து - பாதுகாப்பு உறுதியின்றி சிங்கள மக்களினால் துன்புறுத்தப்படுவதற்கு வழி செய்யப்படுகின்றது.

தொண்டமான், மறுபுறம், இவ்வாறு அப்புறப் படுத்தப்படும் தொழிலாளர்கள் விடயமாக பிரபாகரனுடன் பேசுகின்றார்: இது 200.000க்கு அதிகமான தொழிலாளர்களை தோட்டங்களை விட்டு அப்புறப்படுத்தி மாவெலிப் பகுதிகளில் குடியமர்த்துவதை பாரம்பரிய தமிழ்ப் பகுதிகளில் இவர்களை குடியமர்த்தி அவர்களுக்கு தோட்டங்களுடன் இருக்கும் உறவை முறிப்பதை மையமாகக் கொண்டதாகும்.

கேள்வி; எனது மூன்று சிறு கேள்விகள்: ஒன்று குடியிருப்பு முறை: நீங்கள் கூறினீர்கள் அரசு தோட்ட நிர்வாக அமைப்புக்குள்ளிருந்து தொழிலாளர்களை குடிபெயர்த்து குடியேற்றத் திட்டங்களுக்குள் கொண்டு வர எண்ணுவதாக. காலத்துக்குக் காலம் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஒவ்வொரு பிரிவும், ஒவ்வொரு கிராமமாக அங்கீகரிக்கப்பட்டு கிராம மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் உறுதி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளனவே. இது தொடர்பாக நீங்கள் சொல்வதென்ன ?

பதில்: நிச்சயமாக! அதுவே எமது கோரிக்கை. 1974 ல் தோட்டத்துறை அரசுடைமையாக்கப்பட்ட போது, ல, ச. ச. கட்சியை விட்டு வெளியேறியதுடன் நாம் இக் கோரிக்கையை முன் வைத்தோம். தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் கடந்த அரசினால் வெளியேற்றப்பட்டமைக்கு எதிராக நாங்கள் போராடினோம், தோட்டத்தின் ஒவ்வொரு பிரிவும் தனித்தனிக் கிராமமாக-தொழிலாளர்கள் உள்ளூர்த் தேர்தலில் வாக்களிப்பு உரிமைகள்; விவசாய விஸ்தரிப்புச் சேவை உரிமைகளுடன் விவசாய அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென கோரினோம். அவர்களை கிராம மக்களினின்று பிரிப்பதல்ல: இவ்வாறு அவர்களை கிராம மக்களுடன் ஒன்றிணைப்பதே அவர்களின் சுய நிர்ணய உரிமையை உறுதி செய்யும்.

கேள்வி: அரசு தொழிலாளர் வதிவிடங்களை நிர்வாகத்தினின்று வேறுபடுத்தவுள்ளது என்றும் அவ்வாறு செய்வது தொழிலாளர்களை இனவாதத் தாக்குதலுக்கு ஆளாக்கும் என்றும் சொன்னீர்கள். முன்னர், தனியார் துறையின் கீழ் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தது என்றும் ஆனால். அரசுடைமையின் பின்னரே தொழிலாளர்கள் இன வெறிச்செயல்களுக்கு இலக்கானார்கள் என்ற வாதங்கள் 1977, 81, 83 சம்பவங்களை குறிப்பிடுகின்றன. நீங்கள் இது தொடர்பாக கூறுவதென்ன ?

பதில்! இதற்கு பொறுப்பு யார்? இரு அரசுகளுமே, தோட்ட நிர்வாகிகள் அவர்களுக்கிடப்பட்ட கட்டளைகளுக்கேற்பவே செயல்பட்டார்கள், தோட்டக் தொழிற்துறை அமைச்சரும், ஜனாதிபதியும் நிர்வாகிகளுக்கு வெளியாரையோ, பல்வேறு பாடஉக் களையோ, அரசியல் வாதிகளையோ, காடையர்களையோ தோட்டத்துள் நுழைய விடாது, தொழிலாளர்களை பாதுகாக்க தமது முழு அதிகாரத்தையும் பலத்தையும் பிரயோகிக்க வேண்டும் என்ற கண்டிப்பாக கட்டளையிட்டிருந்தால், இந்நிலை ஏற்பட்டிராது அல்லவா? தோட்டங்கள் கைமாறிய போதும் பாரிய நிர்வாக மாற்றங்கள் இடம் பெறவில்லை. தனியார் நிறுவனங்களின் கீழ் கடமையாற்றியோரே பெரும்பாலும் அரசுடைமையின் பின்னரும் தொடர்ந்தனர். பல தோட்டங்களில் தோட்ட நிர்வாகிகள் தாமாகவே பாதுகாப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு தொழிலாளர்களை பாதுகாத்தனர். இதில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தொழிலாளருக்கும் ஆயுதம் வழங்கினர். இதிலிருந்து, அரசு வேண்டுமென்றே ஒதுங்கியிருந்தது என்பதே தெளிவாகின்றது.

கேள்வி: தனியார் மயம் தொடர்பான செய்தியொன்றில் உங்கள் கட்சிப் பத்திரிகையான 'ஹரய' முருகப்பா நிறுவனத்தை மட்டும் குறிப்பிட்டுள்ளது: மேலும் பல நிறுவனங்கள் - மலேசியாவிலிருந்தும் கூட இதில் போட்டியிடும் போது, இந்திய முருகப்பா நிறுவனத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிடுவது, உங்கள் கட்சியை இனவாதக் கட்சியாக கருதுவதற்கு இடமளிக்காதா ?

பதில்: நீங்களே செய்தியை வாசித்திருந்ீர்களெனின் உண்மை நிலை முற்றிலும் மாறுபட்டது என்பதை அறிந்திருப்பீர்கள் முதற்படியாக, முருகப்பா நிறுவனத்தை புகுத்துவதன் மூலம் தங்களைச் சார்ந்த (இந்தியர்) வர்களே இங்கு தோட்டங்களை கையேற்க வருகிறார்கள் என தோட்ட மக்களை நம்ப வைக்க அரசே முயல்கின்றது ஆனால் உண்மையில் சர்வதேசிய நிறுவனமான முருகப்பா நிறுவனம் பல பல்தேசிய நிறுவனங்களின் முகவர் நிறுவனமே. பல, பிரிட்டிஷ், அமெரிக்க நிறுவனங்கள் தமது சார்பில் போம் செய்ய முருகப்பா நிறுவனத்தை நியமித்துள்ளன.

இது, தமிழ்த்தொழிலாளர்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் சந்திக்க வேண்டியினால் எழும் நிலை. ''எம்மவர்களே வருகின்றார்கள்'' என்ற ஒரு போலியான நம்பிக்கையை இத்தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில் இடம்பெறச் செய்வதற்கு முருகப்பா நிறுவனத்தை தமது, ஏஜண்டாக தெரிவு செய்யும் பன்னாட்டு நிறுவனங்களின் கையாளாக தொண்டமான் செயல்படுகின்றார். எனவே, முருகப்பா நிறுவனம் இங்கு வருவது நிர்வாக முகவராக மட்டுமன்று. தொண்டமான் அனுசரணையுடன் அரசியல் முகவராகவுமே இதை அம்பலப்படுத்துவதற்காகவே எமது செய்தி பிரசுரிக்கப்பட்டது. அதை வாசித்திருந்தீர்களெனின், தேசியப் போர்வையின் கீழ் இங்கு வரும் முருகப்பாக்களின் முதற் பணி இந்திய வம்சாவழி கண்டியத் தமிழர்களை பிரிப்பதன் மூலம் அவர்களின் எதிர்ப்பை செயலறச் செய்வதேயாகும் என்பதை ஏற்றுக் கொண்டிருப்பீர்கள்,

கேள்வி: இன்றைய தலைமுறை தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையை விட்டு செல்ல விரும்பவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். சமீபத்தில் பங்களூரில் தமிழர்கள் கர்நாடகத்தவர்களினால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து தோட்டப்பகுதி மக்கள் மத்தியில் பரவலாக - நாம் இங்கு பிறந்தவர்கள், தென்னிந்தியா எமது தாயகமல்ல என்ற கருத்து வேறூன்றியுள்ளது. இந்த நிலையில் உங்கள் கட்சி இனவாத விதைகளை தூவுகின்றது என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் எழாதா?

பதில்: இளந்தலைமுறையினர் மத்தியில் ஒரிருவர் முருகப்பாக்கள் 'நம்மவர்' என்று எண்ணினாலும் அவர்களிற் பெரும்பாலானவர்கள் மாறான கருத்துடையவர்களாகவே இருக்கின்றார்கள். முருகப்பாக்கள் இங்கு வருவது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே என்பதை அறிவார்கள்; தொண்டமான் செல்வாக்கினால் பாதிக்கப்பட்டவர்களே அவர்கள். கல்வியறிவு குறைந்தவர்கள் இவ்வெண்ணத்தை இல்லாதொழித்து. முருகப்பாக்களுக்கு எதிராக தொழிலாளர்களை தயார் செய்ய வேண்டும்.

முருகப்பாக்கள் ஒரு பொதி: பின்னால் இயங்குபவர்கள் பன்னாட்டு நிறுவனங்கள்; இதற்குள் அகப்படாதீர்கள் என இந்திய வம்சாவழி தோட்டத் தமிழ் தொழிலாளர்களை எச்சரிப்பது ஒரு நியாயமான நடவடிக்கையே. தொழிலாளர்கள் எம்மை சரியாக புரிந்து கொண்டுள்ளனர் என நினைக்கின்றோம். இங்கு சிங்கள இனவாதத்திற்கு இடமில்லை. இந்நாட்டு மக்களான கண்டிய தமிழ்த்தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக 'ஹரய' சரியான, நேர்மையான நிலைப்பாட்டையே எடுத்துள்ளது. கிராம சபைகள் தொடக்கம் பாராளுமன்றம் வரை இக்கருத்து தொடர்பான ஒருமைப்பாடு உள்ளது. எனவே, 'ஹரய' செய்தியில் தமது பிரச்சாரத்திற்கு சாதகமாக எடுத்துக்கொள்ள சிங்கள இனவாதிகளுக்கு எதுவும் இல்லை.

கேள்வி; டிமெல் பார்க் கூட்டத்தில் தோட்டத் தமிழ் மக்களை தொண்டமான் விற்று விட்டார் என்று கூறியதன் அர்த்தம் என்ன?

பதில்; இதையே முன்னர் நான், விளக்க முயன்றேன். தோட்டங்களினின்று அப்புறப்படுத்தப்படும் 200,000 தொழிலாளர்கள் மந்தைகளைப் போல் எல். டி. ஈ. யினரிடம் கையளிக்கப்பட்டு கீழ் மாவெலி பகுதிகளில் குடியமர்த்தப்படுவர். அவர்கள் குறைந்த கூலிகளில் வேலைக்கமர்த்தப்படுவதுடன் தேசியப் போம் பேசுவதில் பகடைக்காய்களாக பாவிக்கப்படுவார்கள். இதை நாங்கள் அம்பலப்படுத்தியுள்ளோம் தோட்டத் தொழிலாளர்களே வளர்த்து விட்ட உற்பத்தித் துறையுடன் அவர்களுக்கிருக்கும் உறவை வெட்டி தோட்டத் தொழிலாளர்களை அப்புறப்படுத்த முயல்வது காட்டிக் கொடுப்பதாகும். ரஞ்சன் விஜேரத்ன 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் 100,000 க்கு அதிகமான தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தார். எனினும், இன்று எச்கர் ஒன்றுக்கு ஆகக் குறைந்த எண்ணிக்கையிலேயே தேவைப்படுகின்றனர் என்ற நிலையில் வெளியேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிலாளர் எண்ணிக்கை 200.000 த்தை தாண்டியுள்ளது. தனியார் மயக்கொள்கையின் முதற் தேவையான இவ்வெளியேற்றலின் விளைவாக பாதிக்கப்படவுள்ள தொழிலாளர்கள் பெரும்பாலும் நுவரஎலிய போன்ற செழிப்பான பிரதேசங்களினின்று வெளியேற்றப்பட்டு ஏனைய பகுதிகளுக்கு சிங்கள மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அனுப்பப்படப் போவதில்லை. மாவெலிப் பகுதிகளில் குடியேற்றப்படுவதற்கு எல். டி. டி. ஈ. யுடன் உடன்பாடு ஒன்று தேவை. இச்சதியை அம்பலப்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு கண்டிய தமிழ்த் தொழிலாளியையேனும் அவர்களது தாயகமான-அவர்களின் முன்னோர் வனப்படுத்திய பகுதியிலிருந்து வெளியேற்ற

நாம் அனுமதியோம்.

**கேள்வி:** தோட்டத்துறை நிர்வாக, பொருளாதார சீர்கேடடைந்துள்ளது என நீங்கள் கூறி னீர்கள். நீங்கள் முன்வைக்கும் தீர்வு, அல் லது மாற்றுத்திட்டம் யாது?

**பதில்:** அதிகரித்த தொழிலாளர் பங்கேற்புடன் கூடிய நிர்வாகத் தன்னாதிக்கம் முதற் தேவை. தொழிலாளர் பங்கேற்பை அதிகரிப்பை அடிப்படை யாகக் கொண்ட கூட்டு தொழிலாளர் நிர்வாக கூட்டு ஒப்பந்தம். நிர்வாக சீராக்கல் தொடர்பாக நிபுணத்துவ அறிவுரைகள் ஏற்றுக் கொள்ளப்படுவது டன் முடிவு மேற்கொள்ளுதலில் நிபுணர்களுக்கு அதிக பொறுப்பு - சுதந்திரம் வழங்கப்படுதல் அதி காரப் பரவலாக்கல் கொழும்பிலிருந்து மாநிலம், மாநிலத்திலிருந்து, தோட்டம்: தோட்டத்திலிருந்து பிரிவு என்ற அடிப்படையில் முடிவுகளை மேற் கொள்ளும் பொறுப்பு அடிமட்டத்திலுள்ளவர் களுக்கு அதிகரிக்கப்பட வேண்டும்: உற்பத்தியில் பங் கேற்பு மொத்தத்தில் தொழிலாளர் தலைவர், அமைச்சு இவற்றை உள்ளடக்குவதுடன் செயலர் களும் ஆணையாளர்களும் தோட்டத்துறை அபி விருத்திக்கு வழிகாட்டிகளாக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** ஏலவே இரு நிர்வாக அமைப்புகள் தலைவர் இயக்குநர், உதவி இயக்குநர்கள் துரைமார் களை உள்ளடக்கிய கூறுகளுடன் இயங்கு கின்றன. நீங்கள் கூறும் அமைப்பு இதிலி ருந்து எவ்வகையில் மாறுபடும்?

**பதில்;** இன்று மாநில சபைகளும் யாக்கங்களும் அதிகாரமற்றவைகளாகவேயுள்ளன. மக்கிய சபைத் தலைவர்களும் அவ்வாறே: கடந்த 15 ஆண்டுகளாக இரு அமைப்புகளுடன் பொது நிர்வாக முறையே இருந்தது. நிதி தொடர்பாக முடிவெடுக்காமடியாக வர்களாகவேயுள்ளனர். அதிகாரிகள் தொழிற் சங்கங் களுடன் கூட்டு உடன்படிக்கைகளை செய்து கொள் வதற்கும் அமைச்சின் உத்தரவை எதிர்பார்க்க வேண்டியவர்களாயுள்ளனர். பெரும்பாலும் சிப்பந்தி களையே உறுப்பினர்களாகக் கொண்ட எனது சங்கம் பேச்சுவார்த்தைகளுக்கு செல்லும் போது பெரும் பாலான கேள்விகள் பதிலளிக்கப்படுவதில்லை; செயலாளர்கள் தொடக்கம் ஜனாதிபதி-அமைச் சரவை வரை கொண்டு செல்வோம். இவ்விரு யாக் கங்களும் அதிகாரமற்ற, ஆனால் தற்பெருமை கொள் ளும் அடிமைகளை யொத்தவை என்பது தெளிவு: அலங்கார வாகன-குளிரூட்டப்பட்ட அறை வசதி களையுடைய அதிகாரமற்ற 'பொம்மை' கள். துரை மார்களின் அதிகாரம் தொழிலாளர் உரிமைகளை மறுப்பதற்கும் மற்றும் சில அன்றாட விடயங்களில் முடிவுகளை மேற்கொள்வதற்கும் மட்டுமே மட்டுப் படுத்தப்பட்டுள்ளன; லயக்காமராவை புதுப்பிக்க அதிகாரமற்ற துரைக்கு நீச்சல்த் தடாகத்தை நிறுவும் அதிகாரம் உண்டு. அர்த்தமற்ற, பின்னோக்குத் திட் டம். இது மாற்றப்பட வேண்டும். இது எனக்கு எவ்வதிகாரமுமின்றியிருந்த வட / கிழக்கு முதலமைச் சரையே நினைவு படுத்துகின்றது. எனவே, அர்த்த பூர்வமான அதிகார மாற்றத்திற்கு தன ரீதியான உறவே தேவை.

**கேள்வி:** பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச் சராயிருந்த திரு. காமினி திசாநாயக்கவின் கொத்தணி முறை இன்று முன்மொழியப் பட்டுள்ள திட்டத்தையொத்ததா?

**பதில்;** கொத்தணி இறுதியில் தோட்டத்துறையை தனியார் மயப்படுத்துவதை அடிப்படை நோக்க மாகக் கொண்டது. ஆனால், பல்வேறு தன்னாதிக் கத்தன்மையைக் கொண்டிருந்த இத்திட்டம் அபி விருத்தி நடவடிச்கைகளில் கிராம-தோட்ட ஒன்றி ணைப்பை, தோட்டத்தொழிலாளர் - கிராம மக்கள் உறவை; உற்பத்தி முறையுடன் தோட்டத்தை ஒன் றிணைக்கும் அடிப்படையில் அமைந்தது.

அதன் இறுதிக் கோட்பாடாக 'தனியார் மயப் படுத்தலைக்' கொண்டிராவிட்டால், கொத்தணி முறை இன்றையதை விட பன்மடங்கு முன்னேற்ற கரமானதே.

**கேள்வி:** எனினும் கொத்தணி முறையின் கீழ் தோட்டங்கள் 3 துறைகளாக வகுக்கப் பட்டன. அவைகள் 1) பயிர்ச்செய்கைக் குகந்தது 2) பயிர்ச்செய்கைக்கு தகுதியற் றது 3) பயனற்றது. திரு. காமினி திசா நாயக்க 'இ' பகுதியில் குடியேற்றத் திட் டங்களை ஏற்படுத்த எண்ணியமை அவர் தற்போதைய பாராளுமன்ற தொகுதி அமைப்பு முறையை மாற்றியமைக்க முயல் கின்றார் என்ற சந்தேகத்தை மலையக மக்கள் மத்தியில் இடம் பெறச் செய்ததே?

**பதில்;** முதலாளித்துவத் தலைவரான திரு. காமினி திசாநாயக்க, நுவரஎலிய தொகுதிக்குள் அதிகப்படி யான வாக்காளர்களை கொண்டு வர எண்ணியிருக் கலாம். எனினும் கொத்தணி முறை கேடு பயக்கும் கூறுகளையே கொண்டிருந்தது எனக் கொள்ள முடி யாது. சரியான சிந்தனையுடன் செயல்பட்டிருந்தால், தொழிற்சங்க ஆலோசனையுடன் கொத்தணிமுறையை மக்கள் பகிர்வு, கிராம மறு சீரமைப்புத் திட்டமாக மட்டுமன்றி தோட்டத் தொழிலாளர்களை கிராம அமைப்பை யொத்த நிலையில் குடியமர்த்தும் வழி வகைகளை மேற்கொண்டிருக்கலாம். சிங்கள-தமிழ் கூட்டுறவு முறைகளுக்கு அடித்தளமிட்டிருக்கலாம். திரு. காமினி திசாநாயக்கவின் தவறான, ஒரு முனை வாத அணுகுமுறை இந்த முறையையே சிதைத்து விட்டது. நாம் எதிர்த்தோம்.

கேள்வி: இம்மாதம் 30 ந் திகதி தோட்டத் தொழிற் சங்கக் கூட்டுக்குழு நடாத்தவிருக்கும் அடையாள வேலை நிறுத்தத்தில் நீங்கள் பங்கு கொள்வீர்களா? அல்லது தனித்தே போராடுவீர்களா?

பதில்: இந்த கூட்டுக்குடும்ப அமைப்பில் எம்மை சேர்த்துக்கொள்ளும்படி திரு. நடேசனை நாம் கோரினோம். ஆனால் எம்முடன் இன்னும் பலரையும் தன்னுள் சேர்த்துக்கொள்ள 'குழு' என தம்மை அழைத்துக் கொள்ளும் இவர்கள் தயாராயில்லை. எமது சமீபத்திய இறுதி முயற்சியும் வெற்றி பெறவில்லை. இது, இவ்வமைப்பையும் இதன் செயற்பாட்டையும் சந்தேகிக்க எம்மை தூண்டுகின்றது வரட்சி நீடிப்பதனால் தொழிலாளர்கள் ஓரிரு நாட்கள் வேலையைத்தானும் பெறுவது சிரமமான நிலையில் வேலை நிறுத்தத்தை திட்டமிடுகின்றார். அதே வேளை, திரு. நடேசன் இன்னும் இரண்டு நாட்களில் இந்தியாவுக்கு செல்கின்றாராம். இந்தியாவிலிருந்து கொண்டு இங்கு வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்கின்றார் போலும். நாம் இதை அங்கீகரிக்காத போதிலும், அவர்கள் வேலை நிறுத்தம் செய்தால், நாம் அதை ஆதரிப்போம். எனினும் எமது குழுவினருடன் ஆலோசியாது, முடிவு எதையும் மேற்கொள்ள முடியாது. யாரோ ஒருவரின் முடிவுதான் யதார்த்தம் என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. எமது சகோதர அமைப்பான தோட்டத் தொழிலாளர் சங்கம் தோதொகூகுவில் உள்ளது. தோழர் ரொனிபெரேரா அண்மையில் என்னை சந்தித்தபோது தன்னை கலந்து கொள்ளாமலேயே முடிவு செய்யப்பட்டதாக வருத்தப்பட்டார்; வரட்சியின் காரணமாக மிகவும் கஷ்டத்திற்காளாகிய நிலையில் ஒருநாள் வேலையும் பெரிது என தொழிலாளர்கள் கருதுவதாக சொன்னார். இந்த நிலையில் ஒழுங்கு செய்யாத முறையில், குறிப்பாக தனியார் மயத்திற்கு எதிராக பெரும் பங்காற்றியுள்ள எம்மைப் போன்ற அமைப்புகளின் அனுசரணையில்லாது வேலை நிறுத்தத்தை மேற்கொள்வது, அவர்களின் தூரநோக்கின்மையையே பிரதிபலிக்கின்றது.

கேள்வி: ஏலவே, சில புசல்லாவ பகுதித் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. உங்கள் அனுபவம் என்ன?

பதில்: அந்தப் பகுதியில் எந்த தோட்டமும் எமது அமைப்பில் இல்லை. எனினும் ஆட்கழிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. புதிய விதிகள் அணுகுமுறைகளுடன் தொழிலாளர்கள் மீது நெருக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றனவாம். தொழிலாளர் எதிர்ப்பு தொடர்பாக, ஏனைய சங்கங்கள் எமக்கு அறிவித்துள்ளன.

கேள்வி: அண்மையில் ஒரு செய்தித்தாள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் இவற்றின் கட்டளைக் கிணங்க அரசு வேலை நீக்கத் தடைச் சட்டத்தை ரத்துச்செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இது எவ்வகையில் தோட்டத் தொழிலாளரைப் பாதிக்கும் – நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

பதில்: அது கொலை செய்வதாகும். தனியார் துறைத் தொழிலாளர்களுக்குள்ள தொழிற்பாதுகாப்பு இதுவொன்றே. நான் முன் சொல்லியதைப்போல் அரச நிர்வாகம் மாறுமானால், அடுத்து வருவது தனியார் நிர்வாகமே. அது சட்ட விரோத நிர்வாகம். சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சட்ட விதிகளை மதியாது. இந்த நிலையில் இந்தச் சட்டமும் அகற்றப்பட்டால் தனியார் 'காட்டுஅரசு' நடாத்த வசதியேற்படும். இத்தகைய அபாயகரமான விளைவை ஏற்படுத்தும் வகையில் சட்டத்தை மாற்ற, அல்லது களைய முன்னர் இரத்த ஆறு ஓடும். தொழிலாளர்கள் தயாராயுள்ளார்கள். இந்நாட்டின் வீரமிக்க தொழிலாளர் வர்க்கம் இதற்கு இடமளிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. பல தலைமுறைப் போராட்டங்களின் மூலமாக வென்றெடுத்த இவ்வுரிமையை அபகரிக்க அரசு எண்ணுகின்றது. எமது கோரிக்கைகளையும் ஏற்று வலியுறுத்துவதனாலேயே பாதயாத்திரையை நாம் ஆதரிக்கின்றோம். இது மக்கள் நடவடிக்கையின் ஆரம்பமே. எமது சங்கம் 1/1/92 வேலை நிறுத்தத்துடன் ஆண்டை ஆரம்பித்தது. இதன் நோக்கம் வருவதை முன்னுணர்த்துவதே. இந்த பெறுமதி மிக்க சட்டத்தை ஒழிக்கும் எந்த முயற்சிக்கும் எதிராக தொழிலாளர்கள் எழுவார்கள் என்பதில் ஐயமில்லை.

கேள்வி: ஸ்ரீ ல சு கட்சிக்குள்ளேயே ஆரம்பமாகியுள்ள 'ஹெலஉருமய' (பாரம்பரியப்) தனியார் மயத்திற்கு எதிரான உங்கள் நடவடிக்கையை ஆதரிக்கும் அதே வேளை இனப் பிரச்சினை தீர்வுக்கான தொண்டமான் யோசனைகளை எதிர்க்கின்றதே?

பதில்: இது வேறு விடயம். இந்த ஆர்ப்பாட்டத்தில் தனியார் மய எதிர்ப்பையே எமது கோரிக்கையாக முன்வைத்துள்ளோம். கூட்டங்களிலும், கையேடுகள் மூலமும் இதை நாங்கள் தெளிவு படுத்திய போது அவர்கள் அதை எதிர்க்கவில்லை. எனவே, இது தனியார் மயத்திற்கெதிரான கூட்டு நடவடிக்கையாகும். திலக்கருணாரத்ன தனது சுய எதிர்ப்பை வேறெங்காவது வைத்துக் கொள்ளலாம்; ஆனால் ஊர்வலத்திலல்ல.

கேள்வி: தோட்டத்துறை பிரச்சினைகள் தொடர்பாக நீங்கள் பொது வேலை நிறுத்தத்தை– தோட்டப்பகுதியில் – நடாத்துவீர்களா அல்லது வேறு வகையில் எதிர்ப்பை மட்டும் தெரிவிப்பீர்களா?

பதில்: தொழிலாளர்களை விழிப்புறச் செய்யும் நடவடிக்கைகளையே இப்போது மேற்கொண்டுள்ளோம்.

குறிப்பாக இ. தொ. கா. விவாதங்களையும், 'மக்களை ஏமாற்றுவதுடன் எதுவும் செய்யாதுள்ள தோதொச கூகுவையும் அம்பலப் படுத்துவதன் மூலம் தொழிலாளர்கள் மத்தியில் விடயத் தெளிவை ஏற்படுத்துதல் முதற்தேவை. திட்டமிடப்படாத வேலை நிறுத்தங்களின் விளைவுகள் தொடர்பாக மக்கள் விழிப்படைய வேண்டும். அதன் பின்னர் தொடர்ச்சியான வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், இறுதியில் நகர்ப்புறத் தொழிலாளர்களையும் ஒரே விதப் பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ள புகையிரத, வங்கி ஊழியர்கள் அத்துடன் விவசாயிகள், தமிழ் மக்கள் விடுதலை இவற்றை ஈர்த்துக் கொள்ளும் அரசியற் போராட்டமாக பரிணமிக்க வழி செய்வது எமது நோக்கமாகும். இப்போராட்டத்தை தோட்டப்பகுதிக்கு மட்டுப்படுத்தாது, உவ, ச தே நா நி ஆகியவற்றின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கும் அரசுக்கெதிரான போராட்டமே எமது இறுதி நோக்கம்.

கேள்வி; அரசு தனது திட்டத்தை கட்டங்கட்டமாக நிறைவேற்றுகின்றது. எலவே, அதை புசல்லாவ பகுதியில் பரீட்சை செய்துள்ளார்கள். தனது திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் அரசு முனைப்பாயிருக்கும் இந்நிலையில், உங்கள் போராட்டங்கள் எந்த அளவிற்கு பயனளிக்கும்?

பதில்: அவர்கள் அப்புறப்படுத்தப் படுவார்கள், இங்கு வரும் எந்த ஒரு நிறுவனமும் காலக்கிரமத்தில் உதைத்து அனுப்பப்படுவார்கள். எனவே, அவர்களை வரவேண்டாமென எச்சரிக்கின்றேன். இன்று தொழிலாளர்கள் முழுமையாக உணர்வடையவில்லையெனினும் டயர் கூட்டுத்தாபனத்தில் நடந்தவற்றை உணர வரும்போது, இங்கு வர விரும்பும் தொழிலதிபர்களுக்கு தகுந்த பாடத்தை படிப்பிப்பார்கள். அவர்களுக்கு அது ஒரு வாழ்க்கைப் பாடமாக அமையும்.

கேள்வி: தனியார் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் சம்பள உயர்வும், தரமான குடியிருப்பு வசதிகளையும் பெறுவார்கள் என்று இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமான் கூறியுள்ளாரே, இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

பதில்: அது ஒரு கனவு, ஒரு கேலி. நிறுவன உரிமையாளரும், பல தோட்டங்களின் சொந்தக்காரருமாக முருகப்பா நிறுவனத்தினதும் பன்னாட்டு நிறுவனங்களினதும் தரகரான அவர் ஒரு தொழிலாளர் வர்க்கத் தலைவரல்லர். அவர் தமிழர் கூட வல்லர். அவர் வெளிநாடுகளில் இருக்கும் உரிமையாளர்களின் நிறுவனங்களுக்கு உள்நாட்டுப் பாதுகாவலர். வேறு வர்க்கம்! வேறு தேசிய இனம்; வேற்று மனிதர். தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக அவர் எதையும் பேசுவார். – பேசலாம். தொழிலாளர்கள் அவரை நம்புவதும் அவருடன் இருப்பதும் அவர்தான். அவர்களுக்கு பிரஜா உரிமையை பெற்றுத்தந்தார் என்ற தவறான கருத்தினாலேயே இடதுசாரிகளின் ஒத்துழைப்பும் இதற்கு பங்களிப்பு செய்த உண்மை அவர்களுக்கு தெரியாது. குறிப்பாக இதற்கு நாங்களும் போராடினோம். இந்த மனிதர் யாரென மக்கள் அறிந்து கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். பிரஜா உரிமையைப் போன்றல்ல, இன்றைய -சமூக, வர்க்க ரீதியான பிரச்சினைகளில் இவர் முதலாளிகளின் பக்கம் சார்ந்துள்ளார். தன்னவன் என்று வரும்போது அவர் தனது வம்சாவழி உள்ளிட எதையும் இழக்கத் தயாராயுள்ளார். அவரின் வார்த்தைகளில் தொழிலாளர்கள் தொடர்ந்தும் ஏமாறுவார்கள் என்று நான் நினைக்கவில்லை

## வாசகர்குரல்

'குன்றின் குரல்' இதழ் கிடைத்தது. இதழில் பொழுதுபோக்கிற்கும், இன்பங்களுக்கும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, வாழ்க்கையை ஓட்டும், சுயநலமிகள் மத்தியில் வாழும் எனக்குத் தங்களின் இதழ் துடிப்பைத் தந்தது. பரிசுச்சீட்டு, சினிமா, டி. வி. – களுக்கிடையே தன் நேரங்களைத் தொலைத்துக் கொண்டிருக்கும்- பெரும்பாலானவர்களுக்கிடையில் என் பயணம் - தங்களின் இதழ் கண்டு யோசிக்க வைத்தது. இதழ் தரமாக உள்ளது. 'தேசபக்தன்' இதழ் அட்டைப் படம் எனக்குக் கிடைத்த பொக்கிஷமே.

தங்களின்இதழில் மாத்தளைவடிவேலனின் பெண்ணடிமை தீருமட்டும் படைப்பில் தாயம்மாக் கிழவியின் 'தீட்டுவீட்டு' நாடகம் வயிற்றுப் பிரச்சினையோடு தொடர்புடையதாக இருக்கக் கண்டு நெஞ்சைத் தொட்டது. ஆசிரியர் கனவில் அமுதா எனும் அரும்பு - மூழ்கி- சுற்றுப்புறம் மறந்தது. -கல்விக்காக ஏங்கும் அந்த உள்ளத்தைக் காட்டியது. செல்வி திலகா பழனிவேல் வளமான படைப்பாளி.

சாரல் நாடனின் எண்பதுகளில் மலையகம் - இலக்கியம் ஒரு கழுகுப் பார்வையால் நிறைய சொன்னது, அருமையான பாதுகாக்கப் படவேண்டியது. அன்று இறந்தவன் நம்மில் ஒருவன் படைப்பு மரபு ரீதியில் புதிய கதை படைத்ததாக உள்ளது. வாழ்த்துக்கள்.

- பொள்ளாச்சி நசன்

# மலையகத்தில் சிறு பிரசுரங்கள்

**- சாரல் நாடன் -**

முப்பதுகளில் மலையகத்தில் வாழ்ந்த பலருக்கும் வாசிப்பதற்குத் தமிழ் நூல்கள் நிறையவே கிடைத்தன. பாரதியார், நாமக்கல் கவிஞர், பாஸ்கரதாஸ், வேதநாயகம் பிள்ளை, சங்கரதாஸ் சுவாமிகள், உடுமலை முத்துசாமிக் கவிராயர் ஆகியோரின் படைப்புகள் இவைகளில் குறிப்பிடத்தக்கன. மேலும், 1939 ஆம் ஆண்டு வரையிலும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பிரயாணம் செய்வதில் தங்குதடை எதுவும் இருக்கவில்லை. ''கதிர்காமம், சிவனொளிபாத மலை என்று புண்ணிய யாத்திரை மேற்கொண்ட இந்தியத் தமிழ்க் கவிராயர்களும், புலவர்களும், வித்துவான்களும் கிராமியக் கலைகள் செழித்துப் பரவுவதற்கும், இலக்கியம் வேர் ஊன்றுவதற்குமான வித்துக்களை இட்டுச் சென்றனர். (சிறப்பாகப் பாரதியாரின் கவிதைகளையும், பின்பற்றி சிவனொளிபாதம், கதிர்காமம் ஆகிய ஸ்தலங்களைப் பற்றியும்; பேராதனை, ரதாளை, நுவரெலியா ஆகிய நகரங்களைப் பற்றியும் பாடல் நூல்கள் வெளிவந்தன. ''என்று மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.)

பாடல்கள் இயற்றுவதற்கு நிறைந்த கல்வி அறிவு தேவையில்லை. உணர்வுகளின் வெளிப்பாடே பாடல்களாக வெளிப்படும். அவ்வாறான பாடல்களை அச்சில் கொண்டு வருவதற்கு மேலதிக முயற்சி தேவை. துணிவும், தொடர்பும், அநுபவமும் மிகுந்த சாதாரண தமிழ் அறிந்தவர்கள் இவ்வகைப் பாடல்களை இயற்றி அச்சில் கொண்டு வந்தனர்.

பெரும்பாலான வெளியீடுகள் நான்கு பக்கங்களில் பத்து சத விலைக்கு விற்பனை செய்யப்பட்டன. ஆயிரம், அல்லது இரண்டாயிரம் சிலவேளை ஐந்தாயிரம். பிரதிகள் அச்சிடப்பட்டன. ஒருசிலர் 32 பக்கங்கள் வரையிலான பாடல் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளனர்.

இவைகள் பெரும்பாலும் பஜனைப் பாடல்களாகவும், கும்மிப் பாடல்களாகவும், கதிர்காமப் பயணத்துக்கான வழி நடைச் சிந்தாகவும், சிவனொளி பாத பயணப் பாடல்களாகவும் அமைந்தன, எனினும் சமுதாயத்தில் அவ்வப்போது ஏற்பட்ட அதீத சம்பவங்களான கொலை, மதுக்கொடுமை, பஞ்சம் பற்றியதாகவும் அமைந்திருந்தன.

இங்கு மக்கள் படும் திண்டாட்டம் குறித்தும் இந்தியாவிலிருந்து ஜவஹர்லால் நேருவும், மகாத்மா காந்தியும் விஜயம் மேற்கொண்டபோது பாடியதாகவும் அமைந்திருந்தன.

இந்திய தேசிய உணர்வின் பிரதிபலிப்பாகவும் சில வெளியீடுகள் அமைந்திருந்தன. இத்தகைய பாடல்கள் மலை நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், தோட்டங்களில் வாழ்பவர்களினால் வெளியிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இவ்விதம் பாடல் நூல்களை வெளியிட்டதோடு அமையவில்லை. அவைகளை மக்களிடம் விற்பனை செய்து பாடவும் செய்தனர் என்பதும், மக்களின் மனோ எழுச்சிக்கு நேரடியான காரணிகளாக இருந்தனர் என்பதும் சிறப்பிட்டுக் குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

இந்தக் காலப் பகுதியில்தான் புதுமைப் பித்தன் தமிழகத்தில் பிரகாசிக்கின்றார். 1933 இல் அவரது முதல் சிறுகதை வெளிவந்தது. 1934 இல் துன்பக் கேணி என்ற இலங்கை தேயிலைத் தோட்ட மக்களைப்பற்றிய சிறுகதையை அவர் எழுதினார்.

மலையகத்தில் சிறு சிறு பிரசுரங்களில் கவனம் காட்டியவர்கள் புதுமைப்பித்தனைப்போல சமூக உணர்வு பெற்றிருக்காவிட்டாலும் வெறும் கற்பனைக் கலைஞர்களாக இருக்கவில்லை என்பதை, காலத்தின் தேவைகளுக்குக் காது கொடுப்பவர்களாக இருந்தார்கள் என்பதை தமது பிரசுரங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

## நூலாசிரியரின் வெளியீடுகள்

(நடேசய்யருக்குப் பின்னர் மலையகத்தில் நூல் வெளியீட்டு முயற்சிகளில் மீண்டும் சாதனை புரிந்தவர்களாக எம். ஏ. அப்பாஸ், டி. எம். பீர் முகம்மது என்ற இருவரைக் குறிப்பிடலாம். இலங்கையில் சொற்பகாலமே வாழ்ந்த எம். ஏ. அப்பாஸ் (1953 - 1959) வெளியிட்ட நூல்கள் பரபரப்பூட்டுவனவாக அமைந்திருந்தன. ஒரே ஆண்டில் நான்கு பதிப்புக்கள் வெளிவருவது பரபரப்பூட்டும் நிகழ்ச்சிதான். (கள்ளத்தோணி 1953 ஜூன்/ ஜூலை /ஆகஸ்ட் -செப்டம்பர்) இந்த நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதற்கு மறைந்த கலைவாணர் என். எஸ், கிருஷ்ணன் இலங்கை வந்திருந்தார். இந்த நூலுக்கான மதிப்புரையில் ''உலகத்துக்காக மனிதன் எழுதிய நூல்'' என்று குறிப்பிட்டுப் பெருமைப்படுத்தியுள்ளார்.

தென்னிந்தியத் திருநெல்வேலி ஜில்லா ஏர்வாடி வாசியான எம். ஏ. அப்பாஸுக்கு பலவிதத்தில் அச்சகத் தொடர்புகள் இருந்தன என்றபோதும் ''புத்தங்கள், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், சினிமாக்கள், காட்டாற்று வெள்ளம் போல

# குன்றின் குரல் – ஒரு பார்வை

தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் வெளியிட்டுள்ள 'குன்றின் குரல்' பதினோராம் ஆண்டின் முதல் இதழ் பற்றிய சிறு கண்ணோட்டமிது.

மலையகத்தின் எழுச்சிக்கும் விழிப்புணர்ச்சிக்கும் மூலவர்களாக வித்திட்டவர்கள் கோ. நடேசையர். தம்பதிகள். தோட்டந் தோறும் சென்று பாடல்கள் மூலம் விழிப்புணர் வைத் தட்டியெழுப்பிய திருமதி மீனாட்சி அம்மையார் பற்றி, ஐயரின் நூற்றாண்டு கொண் டாடப்பட்ட காலகட்டத்தில் ஆசிரிய தலையங்கம் தீட்டிக் கௌரவித்திருக்கிறது குன்றின் குரல்.

உலக மாதர் ஆண்டைச் சிறப்பிக்கும் நோக்கில், சாதனைபுரிந்த மாதர் திலகங்கள் பற்றிய கட்டுரைகளுடன், மகளிர் ஆக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதும் மற்றோர் சிறப்பம்சம், சிறுகதைகள் இரண்டும் மலையக மக்களின் பொருளாதார நெருக் கடியையும், பெண்ணடிமைத் தனத்தையும் கோடுகாட்டிச் செல்கின்றன. மாத்தளை வடிவேலன் தனக்கேயுரிய பாணியில், அடிமைத்தனம் தொடர்வதற்கு தொழிலாளர் அமைப்புகளும் துணை போவதாக மிக நாசூக்காக எடுத்துரைத்துள்ளார். திலகா பழனிவேலின் கதையும் தொழிலாளர் அமைப்புகளின் வளர்ச்சியின்மை பற்றியும், அவற்றின் இயலாமை பற்றியும் ஆதங்கப்படுகிறது.

கொள்கையினால் உலகின் கவனத்தையீர்த்த - பாதிப்புகளை ஏற்படுத்திய கார்ல் மாக்ஸின் வறுமை நிலை பற்றி அவருக்கு உறுதுணையாகச் செயற்பட்ட துணைவியார் ஜென்னி, மார் புச் சளி நோய் கண்டு இறந்த தன் குழந்தை பற்றி விபரிக்கையில், 'அவள் பிறந்தபோது தொட்டிலும் இல்லை: இறந்த பொழுது சவப்பெட்டியும் இல்லை' என்று துயர்பட உரைக் கும் சோகம் மனதைப் பிழியும் விதத்தில் ஜே. ஜெஸ்கொடியினால் சித்தரித்துக் காட்டப் படுகிறது.

சாரல் நாடன், திருமதி சோமகாந்தன் போன்றோரின் ஆய்வுக் கட்டுரைகள் முறையே மலையக இலக்கிய வளர்ச்சி - தரம் தேக்கம் பற்றியும் எழுத்துத் துறையில் பெண்களின் பங்கு பற்றியும் அலசுகின்றன. மொத்தத்தில் அந்தனி ஜீவா, பெ. முத்துலிங்கம் போன்ற பத்திரிகை யாளர்களின் ஆளுமை பின்னணியில் இருப்பதாற் போலும் குன்றின் குரல் வெகு கனதியா கவும் நேர்த்தியாகவும், பொதுவில் எத்தரத்தினரையும் திருப்திப் படுத்துவதாய் மலர்ந்துள்ளது.

கணன்

நன்றி ''தொண்டன்,
ஜூன் - 1992.

பெருக்கெடுத்தோட வேண்டும்'' என்று அவர் ஆசைப்பட்டது (கள்ளத்தோணி - பக்கம் 13) இன்னும் கனவாகவேதான் உள்ளது. இவர் எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார். இவரைப்போலவே – தமக்கிருந்த இந்தியத் தொடர்பையும், இந்திய தி. மு. க, தொடர் பையும் நூல் வெளியீட்டு முயற்சிகளுக்குப் பயன்படுத் தியவர். டி. எம். பீர்முகம்மது அவர்கள் ஆவார்.

அவரது மேடைப் பேச்சுகள் அவ்வப்போது பிர சுரங்களாக வெளியாகின. மேடைப் பேச்சுப் பாணி யில் எழுதப்பட்ட நூல்களும் வெளியாகின. கொழும்பு நல்வழிப் பதிப்பகம் இதற்கு உதவிற்று. மேற்குறித்த இத்தனை வெளியீடுகளும் தனி மனித உந்துதலா லும், உழைப்பாலும் வெளியானவைகள். நூலாசிரி யர்களே முயன்று நின்று தமது படைப்புக்களை வெளிக்கொணர்ந்த முதல் கட்டமாகும். இதற்கடுத்த கட்டமாக, பதிப்பாசிரியராக இருந்து நூல் வெளி யீட்டுத் துறைக்கு உழைத்தவர்களில் முதலில் குறிப் பிடப்பட வேண்டியவர் ஆத்மஜோதிப் பதிப்பகம் நா. முத்தையா அவர்களாவார்.

1983 இல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கல வரப் பாதிப்புவரை வெற்றிகரமாகச் செயல்பட்ட இப்பதிப்பகத்தின் மூலம் 1953 விருந்து சிறுகதை, நாடகம், குறுநாவல், கவிதை, பாடல், கட்டுரை என்று இலக்கியத்தின் சகலதுறை சார்ந்த நூல்களும் வெளியாகியுள்ளன. மலையகத்தின் பெண் எழுத்தா ளரின் முதல் குறுநாவலான காந்தியத்தில் மலர்ந்த வாழ்வு (சிவபாக்கியம் குமாரவேல் எழுதியது) இந்தப் பதிப்பகத்திலேயே 1962 இல் வெளியானது.

நன்றி: தமிழ் சாகித்திய விழா மலர்
1992

சிறுகதை

# அவர்கள் வாழ்க்கை அம்பலத்தில்

★

எழிலமுதன்

சின்னச்சாமி அந்தியில் குடித்துவிட்டு காதோரத்தில் சொருகி வைத்திருந்த பீடித்துண்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். பீடித்துண்டில் காரம் மிகவும் குறைவாயிருந்தது. இரண்டு 'தம்'மை நன்றாக இழுத்துவிட்டு வீசியெறிந்தான்.

'சன்லைட்' சவர்க்காரப் பெட்டியின் மேல் வைத்திருந்த அந்தக் குப்பிலாம்பு தூங்கிவழிந்து கொண்டிருந்தது. வீசிக்கொண்டிருந்த காற்றுக்கு அதன் சுடர் சரணடைவது போலப் படுத்துப் படுத்து, சாய்ந்து சாய்ந்து தலைதூக்க முயன்று கொண்டிருந்தது. சின்னச்சாமி விளக்கையே பார்த்துக்கொண்டிருந்தான்.

'லாம்பு அணைஞ்சி போயிட்டா ஒரு நெருப்புக்குச் சிக்கு வீண் செலவு.....'

இது அவன் மனதில் தோன்றிய போது அவன் விரல்கள் தாமாகவே அந்த விளக்கிற்குக் காற்றிலிருந்து பாதுகாப்பு கொடுக்க முயன்று கொண்டிருந்தன.

சற்று தூரத்தில் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருந்த புகையிரதம் பெருத்த இரைச்சலிட்டுக் கொண்டு ஓடியது. அவன் நேரத்தை எட்டு மணியென உறுதிப்படுத்திக் கொண்டான். முன்பு அவன் குடும்பத்தோடு தோட்டத்தில் இருக்கையில் நேரத்தைத் தெரிந்துகொள்ள 'தேயிலை ஸ்டோர்' மணிச் சத்தம் உதவி செய்யும். அதை அவன் லயக் காம்பராவிலிருந்து கேட்டுக்கொண்டிருப்பான். ஆனால் இப்போது...

அவனும் அவன் குடும்பமும் தோட்டத்தில் இல்லை. அதனால் அவன் ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்தைக்கொண்டு இந்தப் பெரிய மரத்தின் கீழிருந்து (அது அந்தப் புகையிரத நிலையத்தினை ஒட்டியிருந்தது) நேரத்தினை அனுமானித்துக்கொண்டிருக்கிறான்,

சின்னச்சாமி இருந்த இடத்தை விட்டு எழும்பி சோம்பல் முறித்துக்கொண்டே வெளியே வந்து வானத்தைப் பார்த்தான். வானத்து நட்சத்திரங்களைக் கருமேகங்கள் ஒளித்துக்கொண்டிருந்தன. மின்மினிப் பூச்சிகள் அங்கும் இங்கும் பறந்து போய்க்கொண்டிருந்தன. வழக்கத்திலும்பார்க்க அன்று வெப்பம் கொஞ்சூடவே இருந்தது. வானத்தில் மேகங்கள் திட்டுத்திட்டாய் ஒன்று கூடிக் கொண்டிருந்தன 'மழை வரும் போலருக்கு' திகிலுடன் அவன் தனக்குத்தானே முனகிக்கொண்டான்.

படுக்கைக்குப் போகும் நேரம் என்றபடியால் அவன் பிள்ளைகளின் சந்தடி அதிகரித்தது. தன் குடும்பத்தின் தற்காலிக வாசஸ்தலமாக அவன் அந்த புளியமரத்தின் அடியை ஆக்கிரமித்திருந்தான். அவனைப் போலவே வேறு சில குடும்பங்களும் மர ஓரங்களையும் ஒதுக்குகளையும் கொண்டிருந்தன.

'அண்ணே.. இன்னக்கி நா மர ஓரத்துல படுப்பேன்'—சின்னச்சாமியின் சின்னமகன் சொன்னதற்கு மூத்தமகன் பதில் சொன்னான்:

'நாளக்கி நீ படு..இன்னைக்கு மட்டும் நா..சரியா?'

நீ எந்த நாளும் இப்பிடித்தாஞ் சொல்ற. இன்னக்கி அங்கதான் படுப்பேன்.'

'ஏலாது... நாங் குடுக்கமாட்டேன்'

இதனிடையே கைக்குழந்தை வேறு கத்தத் தொடங்கிவிட்டது. செல்லம் அதனைத்தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டாள்; அதுதான் சின்னச்சாமியின் மனைவி

'டேய் சத்தம் போடாம படுங்கடா'' இருக்கிறதே மரத்தூர்ல, இதுலவேற சொந்தங்கொண்டாடுறீங்களா?'

இருவரும் இப்போது முனகிக் கொள்கிறார்கள்.

'இப்ப படுக்கல ரெண்டு பேரையும் செம்மையா உரிப்பேன்..'

அதட்டிக்கொண்டே சின்னச்சாமிக்குச் சற்று எட்டவந்து உட்கார்ந்துகொண்டாள் செல்லம்." வெற்றிலை ஒரு வாய்க்கு அவளிடம் வாங்கி மென்றுகொண்டே தரையில் சாவகாசமாகச் சாய்ந்துபடுத்துக்கொண்டான் அவன்.

பசி தன் பற்றாக்குறையை அவன் வயிற்றில் கிள்ளிச்சொல்லத் தொடங்கியது. கொஞ்ச நேரத்திற்கு முன்னர்தான் சாப்பிட்டான் என்றாலும் வயிற்றின் தேவைக்கு ஒட்டியதாக அது இல்லாதது அவனைத் தொந்தரவுப்படுத்தியது. இருந்ததைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து எஞ்சியதில் தனக்கொரு பங்கைக்கொடுத்து அதிலும் குறைந்த பங்கையே செல்லமும் சாப்பிட்டது அவனுக்குத் தெரியும்.

அவனுக்கு அந்த வாழ்க்கையே சகிக்கவில்லை. 'சே.. என்னா நாய்ப் பொழப்பு, வாய்க்குமில்லாம வவுத்துக்குமில்லாம' பெருமூச்சுடன் முனகிக்கொண்டான்

செல்லம் கைக்குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்தாள்

குழந்தை மார்பை சப்பிச் சப்பி நெளிந்துகொண்டிருந்தது.

'நாளக்கி என்னா செய்றது?...' செல்லம் கேட்டாள். அவன் மௌனமாயிருந்தான்.

முன்பு தோட்டத்தில் அவர்கள் இருந்தபோது வாழ்க்கை இதே பற்றாக் குறையாய்த் தானிருந்தாலும் அரைகுறையாய் சமாளிக்கவாவது ஒரு நிரந்தர வேலை இருந்தது ஆனால் இப்போது—

அந்த உழைக்கும் இயந்திரங்கள் பாதையில் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன. தோட்டம் என்ற உலகம் இப்போது தெருவோர வாழ்க்கையாக மாறிவிட்டிருக்கின்றது. நடுத்தர வயதைக் கடந்து முதுமையை எட்டிப் பிடித்த பல ஆத்மாக்கள்—அவன் வாழும் உலகத்தவர்கள்—பிச்சையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் அவன் வயதும் நிலைமையும் அந்தத்தகுதியை வழங்கக்கூடியதில்லை அதனால்தான் அவன் அங்கும் இங்கும் நாயாய் ஓடி கிடைக்கின்ற சில்லறை வேலைகளை மாடாய்ச் செய்து கொண்டிருக்கின்றான்

'ஏங்க பேசாம இருக்கிங்களே நாளக்கி என்னா செய்றது?'

'என்னாத்தைச் செய்றது... பாப்பம்.— அவன் நீண்ட மௌனத்தின் பின்னர் பெருமூச்சுடன் அதைச் சொன்னான்.

செல்லம் வேகமாக ஓடிக்கொண்டிருந்த லொரியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மௌனம் அவர்களிடையே வெகு நேரம் நீடித்தது. அவள் வாயிலிருந்த வெற்றிலைச் சாற்றை எழும்பி வெளியே துப்பி விட்டுவந்தாள்.

'யோசிச்சிக்கிட்டுருந்து என்னா செய்ய, ஆண்டவன் விட்டவழி நடக்கும். வாங்க படுப்பம்.

செல்லம் சுலபமாகப் பிரச்சினை ஆண்டவனிடம் ஒப்படைத்துவிட்டாள். ஆனால் சின்னச்சாமி?

அவன் அவளையே பார்த்திருந்துவிட்டு பெருமூச்சுவிட்டான்.'ஓ.. செல்லமுந்தான் எப்படி மெலிஞ்சி போய்ட்டா, மூணு புள்ள பொறந்தப்புறம். ஒரு புரோசனமுமில் ௱த வாழ்க்கையாப் போச்சி'

அவன் சிந்தனைகள் அவன் வாழும் அந்த உலகத்தைச் சபித்தன. வெறுக்க வைத்தன. ஆக்ஸ்ட்டுக்' கலவரமும் வந்தது தான் வந்தது இருந்த பொட்டுப்பொடியெல்லாம் கொள்ளை போய் அடியும் உதையும்தான் மிஞ்சியது. சில நாட்கள் மாத்தளைக் கோயிலில் கிடந்து இறுதியாக வடக்கே அனுப்பினார்கள். புளியங்குளம் கிளிநொச்சி என்று அவனும் அவனோடு வந்தவர்களும் அலைந்து இறுதியில் இந்த மரத்தூறிலே ஒண்ட வேண்டியதாயிற்று' இந்தியாவுக்குப் போகவேண்டியவர்கள் என்பதனால் அவனைப் பொறுத்தவரையில் புனர்வாழ்வு திட்டங்களும் புறக்கணித்துவிட்டன. தன் முன்னோர்களாலும் தங்களாலும் போஷாக்க செய்யப்பட்ட அந்தத் தோட்டத்திலிருந்து அவர்கள் உதைத்து விரட்டப்பட்டனர். தோட்டத்தில் ஓரளவு நல்லாயிருந்தவர்கள் கூட இன்று பிச்சையெடுக்க வந்துவிட்டார்கள். தன் பிள்ளைகளை அந்த நிலைக்கு விடக் கூடாது என்ற திடசித்தம் சின்னச்சாமியிடமிருந்தாலும் அந்த விளிம்பில்தான் ஒட்டிக்கொண்டிருக்கிறோம் என்பதை அவன் பரிபூரணமாகத் தெரிந்திருந்தான்.

செல்லம் போய்படுத்துவிட்டாள் அவனும் படுக்கைக்குப் போக எழும்பினான். அந்த குறுகிய இடத்தில் ஐந்து உயிர்கள் ஒடுங்கவேண்டும். செல்லத்தோடு ஒடுங்கியிருந்த படுக்கையில் அவன் தன்னை கிடத்திக் கொண்டான்

எவ்வளவு நேரம் அவன் பிரச்சினைகளிலும் அவற்றுடன் தொடர்ந்த சிக்கல்களிலும் ஆழ்ந்திருந்தானோ, தெரியவில்லை. சுய பிரக்ஞையை எட்டியபொழுது இன்னும் தனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்டான். வயிற்றில் பாரம் குறைவு என்பதால் தூக்கம் அவனை ஒட்ட மறுத்தது.


படுக்கையில் ஒரு தரம் புரண்டு படுத்தான். செல்லம் தூங்கியிருப்பாளோ தெரியவில்லை. அவள் சுருண்டு முடங்கியிருந்தாள். ஒருமுறை வெளிக்குப் போய்விட்டு வந்தான் சின்னச்சாமி ஓரத்தில் குடித்துவிட்டுப் போட்டிருந்த ஒரு சுருட்டுத் துண்டு கிடந்தது. ஒரு துண்டு கடதாசியைக் கிழித்து அதனுடன் சுருட்டினை நீளமாக்கிக் கொண்டு புகைத்தான்.

தூக்கம் இன்று முழுதும் வராதா? அவனுக்கு எரிச்சலாக இருந்தது. சுருட்டை எறிந்துவிட்டு வந்து படுத்துக்கொண்டான்.

அவனுக்கு இப்பொழுது தூக்கமே முழுத்தேவையாய் இருந்தது. எவ்வளவு நேரம் கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் தூக்கம் ஒட்ட மறுத்தது. தூக்கம் வரும் வரை அவன் தன்னை மறக்கவேண்டும். உறக்கமற்ற அந்த இரவில் அவன் தன்னை மறக்கவேண்டும். நாளெல்லாம் தன்னை அழுத்தும் சிக்கல்களிலிருந்து கொஞ்சநேரமாவது விடுபட்டிருக்கவேண்டும். தூக்கமே அவனது யாசிப்பாய் இருந்தது. பசியின் வேகம் அடங்கிஉறக்கம்; அந்த இடத்தை நிரப்ப அவன் என்ன செய்யலாம்?

இப்பொழுது அவன் செல்லத்திடம் கொஞ்சம் ஒட்டிப்படுத்தான் 'இவளுக்கு படுத்ததும் எப்படித்தான் தூக்கம் வருதோ?' செல்லத்தின் ஸ்பரிசம் இப்பொழுது அவ

(28 ம் பக்கம் பார்க்க)



கண்டி சத்தியோதய நடத்திய வில்லிசை பயிற்சி அரங்கை மத்திய மாகாண பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. எம். வை. எம். முஸ்லீம் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைக்கிறார். இரண்டாவது படத்தில் நடிக்வேள் லடீஸ் வீரமணிக் குழுவினர் வில்லிசைத்துப் பாடுகின்றனர்

## மலையக ஆசிரியமணிகளுக்கு

# வில்லில் கதை சொன்ன வீரமணி

மலையகத்தில் மறைந்துவரும் பாரம்பரிய கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டு இசைக்கு புத்துயிர் அளிக்குமுகமாக கண்டி சத்தியோதய நிறுவனம் மத்திய மாகாண கல்வி அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் திரு. எம். வை. எம். முஸ்லீம் அவர்களின் அனுசரணையுடன் மலையகக் கலை இலக்கியப் பேரவை செயலாளர் திரு. அந்தனி ஜீவாவின் பொறுப்பில் வில்லிசை பயிற்சி அரங்கு ஒன்றினை ஏப்ரல் மாதம் முதல் வாரம் கண்டி சத்தியோதய மண்டபத்தில் நடத்தியது.

தமிழ்மொழி தினவிழா போட்டிகளில் வில்லிசையும் ஒன்றாக இருக்கும் காரணத்தால் மத்தியமாகாணத்தைச் சேர்ந்த நாற்பது ஆசிரியர்கள் இந்த வில்லிசைப் பயிற்சியில் பங்கேற்றனர். சத்தியோதய நிறுவன இணைப்பாளர் வண. பிதா போல் கஸ்பர்ஸின் ஆசி உரையுடன், பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. எம். வை. எம். முஸ்லீம் வில்லிசை பயிற்சி அரங்கை குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்தார். பயிற்சி நெறியாளர்

### ஜே. ஜேஸ்கொடி

அந்தனி ஜீவா இந்த பயிற்சிநெறியினைப்பற்றி விளக்கியபொழுது 'மலையக் மக்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டிசைக்கு புத்துயிர் அளிப்பதற்காகவும், இந்தக் கலையை மறைந்து விடாமல் பாதுகாப்பதற்காகவும் இதுபோன்ற பயிற்சி அரங்குகள் நடைபெறுவது அவசியம்'' எனக் குறிப்பிட்டார்.

கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த வில்லிசைவேந்தர் வீரமணிக் குழுவினர் வில்லிசைபற்றி விளக்கியதுடன், வில்லிசைக் கருவிகளை எவ்வாறு இசைப்பது, கருவிகளை எவ்வாறு உருவாக்குவது, எத்தகைய கருவிகளை வில்லிசைக்கு உபயோகப்படுத்தவேண்டும் என விளக்கியதுடன் மஹாகவியின் கண்மணியாள் கதை' என்ற வில்லுப்பாட்டையும் இசைத்து பாடிக்காட்டினர் இந்த வில்லுப்பாட்டு பயிற்சிநெறி பிரபல சிங்கள கமிரா நிபுண திரு. பராக்கிரம சில்வா வீடியோவில் ஒளிப்பதிவு செய்தார் இந்த வில்லுப்பாட்டு பயிற்சி நெறிக்கான சகல ஒத்துழைப்புகளை வழங்கி செயல்பட்ட சத்தியோதய நிறுவனத்தைச் சேர்ந்த திரு. மில்டன் பெரேரா பாராட்டப்பட வேண்டியவர்.

# வாசகர் குரல்

## 'குன்றின் குரல்' நன்கு ஒலிக்கும்

**எம். நாமநாதன் (குறிஞ்சிமகன்)**

சிறிது இடைவெளியின் பின் வசந்த காலத்தில் மலர்ந்துள்ள குன்றின் குரல் பெரும்பாலும் (மலையக) சமூகத்தில் பெண்களின் நிலைபற்றி கூறுகின்றது. கதை, கவிதை, கட்டுரை என்ற ரீதியில் தத்தமது கோணத்தில் அவை வெளியாகியுள்ளன.

மாத்தளை வடிவேலனின் சிறுகதையில் தாயம்மா கிழவியின் செயல் மாறுபட்டதாக இருப்பினும் யதார்த்த நிலையில் அதன் சாத்தியங்கள் சற்று சிந்திக்க வேண்டியவையே.

கல்வியைத் தொடர முடியாத ஒரு மலையகப் பெண்ணின் அவலம் செல்வி திலகா பழனிவேலின் குட்டிக்கதையில் தெரிகிறது. மணிவிழாக் காணவிருக்கும் குறிஞ்சி தென்னவன் கவிதை குளிர் உடையில் தளிர் நடைபோடுகிறது, ஆயினும் அவருடைய காத்திரமான படைப்புகளிடையே இது சாதாரணமானதாகவே தெரிகிறது. ஏனெனில் பண்பட்ட கவிதைகள் பல ஏற்கனவே வாசகர்களிடையே பிரபல்யமடைந்துள்ளன.

மலையக தோட்டத் துறையைச சார்ந்த பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெறுவது முயற்கொம்பெனினும் அஞ்சலை போல் அந்நிய மண்ணில் சில ஆயிரங்கள் என்றாலும் வாழ்க்கையில் உழைப்பதற்காக தோட்டப் பெண்களும் போவது நல்லதுதான். எனினும் புசல்லாவ இஸ்மாலிஹாவின் கவிதையின் இறுதி நான்கு 'வரிகளும் பெண்ணடிமைத்தனம் என்பது 'பாஸ்போர்ட்' பெற்றுச்சென்றாலும் தீரப்போவதில்லை என மிக அழகாகக் கூறுகின்றன.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருப்பது நாடறிந்த மலையக எழுத்தாளர் சாரல் நாடனின் 'எண்பதுகளில் மலையக இலக்கியம்' என்னும் ஆய்வுக் கட்டுரையே. மலையக இலக்கிய பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் அவற்றின் படைப்பாளிகள், வெளியிட்ட அமைப்புகள் மற்றும் இலக்கிய முயற்சிகள் பற்றிய விபரங்கள் இவரின் ஆய்வுப் புலமையை நன்கு வெளிக்காட்டுகிறது. மலையக இலக்கிய தொடர்பான இவரின் ஆய்வுகள் பல ஏற்கனவே வெளிவந்துள்ளமை பலரும் அறிந்ததே.

புதிய ஆசிரியர் குழுவில் அனுபவம் வாய்ந்தவர்கள் இருப்பதனால் 'குன்றின் குரல்' நன்கு ஒலிக்கும் என நம்பலாம்.

சீ. சீ. தமிழ் வித்தியாலயம், கண்டி

## நீலகிரியிலிருந்து...

**வீரா. பாலச்சந்திரன்**

குன்றின் குரல் கிடைத்தது. நீலகிரிக்கு வந்ததும் வேலைப்பளு அதிகம். அங்குள்ள நமது மக்களையும் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. இங்கு நமது மக்களுக்கு தாங்கொணாத துயரங்கள் இழைக்கப்படுகின்றன. திரு. சிவலிங்கம் உட்பட நானுமாக மொத்தம் 13 பேர் கைது செய்யப்பட்டு கோவைச் சிறைச்சாலையில் 21 நாட்கள் இருந்தோம். நீலகிரியில் நமது மக்கள் விரட்டப்படுகிறார்கள். குடிசைகள் கொளுத்தப்படுகின்றன. பல்வேறு அடக்குமுறைகளுக்கும் உள்ளாகிறார்கள். அனுதினமும் போராட்டமாக இருக்கிறது. தாயகம் திரும்பிய தமிழர்களை அன்னியர்கள் என்று கூறி அனைத்து உரிமைகளும் மறுக்கிறார்கள். இதுபற்றி நான் கட்டுரை எழுதி அனுப்புகிறேன். பிரசுரிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை இங்கு கவனிப்பாரற்றுப்போய், தாயகம் திரும்பியோரெல்லாம் ஏதோ கலவரத்தில் வந்த அகதிகளைப்போலவும் அவர்கள் திரும்பிச் செல்லவேண்டும் என்பது போலவும் இங்கு காரியங்கள் நடைபெறுகின்றன. இப்படி பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றோம்.

மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம், கோத்தகிரி

---

(26 ம் பக்கத்தொடர்ச்சி)

னை வேறு வழியில் திருப்பத்தொடங்கியது. எங்கும் நிசப்தமான அமைதி. அவன் உணர்ச்சிகள் கொஞ்சம் விழிப்பு பெற்றன. கைகள்தாமாக அவ்ளை நோக்கி நகரத் தொடங்கியது.

'திங்க இல்லாட்டியும் பரவாயில்ல இதுல கொறைச்சலிருக்காது.

எரிச்சலுடன் கூடிய சிரிப்பு அவனுக்கு. ஒரு கொஞ்ச நேரத்தில்

மழைத் தூறல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விழத்தொடங்கியது

'ஆத்தா.. ஆத்தா மழ பேயுது,

மழை கொஞ்சம் பெரியதாய்த்தொடங்கிவிட்டது. சின்னவனும் இப்பொழுது விழித்துக் கொண்டு முனங்கினான்.

சகிக்க முடியாத எரிச்சலுடன் அன்றைய தூக்கத்தை இழந்து திடுக்கிட்டு எழும்பியபோது அவனது இரண்டு மகன்களும் மழைக்கு ஒண்டுவதற்காக அவனுக்கு முன்னரேயே புகையிரத நிலைய வாசலுக்கு ஓடிக்கொண்டிருந்தார்கள்.

சமூகவியல் நோக்கு

# மலையக தமிழரது சமூக கட்டமைப்பு

ஜெ. சற்குருநாதன்

இந்நாட்டின் சமூக, பொருளாதார விடயங்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்திவரும் இந்திய வம்சாழியினரான மலையகத் தமிழ் மக்களின் சமூக அமைப்பை விளங்கிக் கொள்வது அவசியமாகும். ஏனெனில் இச்சமூகம் தனது முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பதற்கும் இச்சமூகத்தைப்பற்றி பேசுவதற்கும் இவ்விடயம் முக்கியமானதாகும். அத்தோடு இச்சமூக அமைப்புக்கு ஒரு தலைமைத்துவத்தை வழங்கி வழிநடத்தும் போது பல சிக்கல் நிறைந்த விடயங்களை தீர்க்க கூடியதாக இருக்கும்.

மலையக தமிழரது சமூக அமைப்பை குறிப்பாக மூன்று விடயங்களில் கவனத்தை செலுத்துவது அவசியமாகும்.

(1) சாதி அமைப்பு முறைகளும் கங்காணிகளின் தலைமைத்துவ முறையும்

(2) இலங்கை அரசியல் தனிமைப்பாடு

(3) தொழிற்சங்க கட்டமைப்பு முறை

இம்மூன்று அம்சங்களே முக்கியமாக இவர்களின் வாழ்வியல் போக்கினை நிர்ணயிக்கின்றன. இத்தோடு புதிய மத்தியத்தர வர்க்க எழுச்சியும் இச்சமூக அமைப்பை இசைவாக்குகிறது.

மிகவும் பின்தங்கிய இந்திய பழைய மரபுகள் இறுக்கப்பட்ட நிலையில் இம்மக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பிரித்தானியரால் கொண்டுவரப்பட்டனர். இந்தியப் பண்பாட்டின் கிராமப்புற சமூக அமைப்போடு இலங்கைக்கு புலம்பெயர்ந்தனர். மலையகப் பகுதிகளில் இந்திய கிராமப்புற சாதி அமைப்பு முறைகள் கங்காணிமார்களின் தலைமைத்துவத்தில் தொடர்ந்து காணப்பட்டது. இம்மக்களுக்கு கொடுக்கப்பட்ட குடியிருப்புகளும் சாதி அமைப்போடு பின்னிப் பிணைந்திருந்தது. கங்காணி தலைமைத்துவப் பண்பின் துரைத்தன போக்கோடு குலமரபும் இணைக்கப்பட்டிருந்தது. ஒருவர் செய்த வேலையை அவர்களின் பரம்பரையினரே செய்யவேண்டும் என்ற நிலை காணப்படுவதை அவதானிக்கலாம். இது வேலை பிரிவினை அடிப்படையில் எழுந்த சாதி அமைப்புமுறைகளும் இச்சமூக அமைப்பில் தொடர்ந்துகொண்டிருப்பதை காணலாம். இம்மக்கள் மத்தியில் காணப்படும் நடைமுறை வழக்குகள், விழாக்கள் போன்ற அம்சங்களின் குலமை தாங்கும் நிலை இன்றும் உயர்தர வர்க்கத்தினரிடையே இருந்துவருவதைக் காணமுடிகின்றது. இந்தியாவில் காணப்பட்ட பண்ணை அடிமைமுறை இங்கு கங்காணிஎன்றமுறையில் தொடர்ந்து இருக்கின்றது. கால வர்த்தமானங்களிடையே இம்முறை இப்பொழுது மிகவும் தளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டியது, இலங்கை அரசியலின் தனிமைப்பாடு. ஆரம்பத்தில் சிங்களவர் மத்தியில் இம்மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்றநிலை காணப்பட்டது. இம்மக்களின் வாழ்வியல் அம்சங்களும் புவியியல் ரீதியான ஒழுங்கமைப்பும் இவர்களின் தனிமைப்பாட்டை பேண உதவியது. சிங்களவர்கள் இவர்கள் மீதுகொண்ட கசப்புணர்வும் இவர்களை வெறும் கூலிகளாக மதிக்கும் மனப்பாங்கும் காணப்பட்டது. சுதந்திரம் அடைந்த பின்னரும் இந்நிலை தொடர்ந்து வருவதை அவதானிக்கலாம். மேலும் மட்டக்களப்பு, யாழ்ப்பாண தமிழர்கள் மத்தியிலும் இவர்களின் மதிப்பீடு குறைந்தநிலையிலேயே காணப்பட்டது பெருந்தோட்டப் பகுதியினரில் பெரும்பாலும் தொழிலாளர்களாகவே காணப்பட்டதால் நாகரீக ரீதியில் தூரநோக்கு பார்வையே மட்டக்களப்பு, யாழ்ப்பாண தமிழரிடையே காணப்படுகின்றது. அத்தோடு மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் உள்ள உயர்தர வர்க்கத்தினரால் இழிவாகக் கருதப்பட்டன. ஒருபுறம் பெரும்பாலான சிங்களவர் மத்தியில் இம்மக்களைப் பற்றிய கண்ணோட்டம் வேறுபட்ட மனப்பான்மையில் சென்றுகொண்டிருக்க, மறுபுறம் இலங்கையில் வாழும் மட்டக்களப்பு, யாழ்ப்பாண, வவுனியா போன்ற மாவட்டத்தில் வாழும் தமிழர்கள் வேறுவகையாக நோக்குகின்றனர். இதனால் இவர்க

வின் தனிமைப்பாடு அதிகரித்துக்கொண்டு போகின்றது. இவர்களை தேசிய ரீதியில் ஒன்றிணைக்கும் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அது ஆக்கப்பூர்வமான முறையிலும் தெளிவான கண்ணோட்டத்துடன் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கை அரசியலில் காய் நகர்த்தும் நிலையாகவே தொடர்கிறது.)

( இனி தொழிற்சங்க அமைப்பை நோக்குவோம். ஆரம்பத்தில் இம்மக்கள் உழைப்பை மட்டும் கொடுக்கும் ஒரு விற்பனைப் பண்டமாக இருந்தனர். இவர்களின் இருள் நிறைந்த அடிமை வாழ்விலிருந்து நீங்குவதற்கு ஒரு ஒழுங்கு முறைக்கு ஆரம்பத்தில் கொண்டு வர முடியவில்லை. இதற்கு பிரித்தானிய அரசின் கடினமான போக்கும் ஒரு காரணமாகும். 1919 ம் ஆண்டு நடேச ஐயர் இலங்கையில் முதலாவது தொழிற்சங்கவாதியானார். ஏ. இ. குணசிங்கவுடன் இணைந்து இம்மக்களை தொழிற்சங்க அமைப்பிற்குள் கொண்டு வர முயற்சி செய்தார். ஆனால் குணசிங்கவின் அப்போதைய நிலை நடேச ஐயரை தொழிற்சங்கத்திலிருந்து விலகச் செய்தது. 1931 ம் ஆண்டு டொனமூர் அரசியல் அமைப்பில் கொடுக்கப்பட்ட வாக்குரிமையின் விளைவாகவே தொழிற்சங்க ஒழுங்கமைப்பிற்கு வர முடிந்தது. 1947ல் இம்மக்கள் அரசியலில் காட்டிய உத்வேகம் இலங்கை தேசியவாதிகளிடையே ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் பின்னரே இம்மக்களை சிதறடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சியிலிருந்து விடுபடுவதற்கு தொழிற்சங்க அமைப்பைவிட வேறு எந்தத் தீர்வையும் முன்னெடுக்க முடியவில்லை. எனவே இம்மக்களின் சமூக அமைப்பில் தொழிற்சங்கஅமைப்பு தவிர்க்க முடியாதபடி வளர்ந்துவந்துள்ளது. இன்றைய நிலையிலும் தொழிற்சங்க அமைப்பு இம்மக்களிடையே செல்வாக்கு பெற்றிருப்பதைக் காணலாம். அத்தோடு இம்மக்களில் பெரும்பான்மையோர் தொழிலாளர்களாகக் காணப்படுவதால் இவ்வமைப்புக்குள் வருவது தவிர்க்க முடியாததாயிற்று. தொழில் ரீதியான பிரச்சினைகளை அணுகுவதற்காக இம்முறை இவர்கள் வாழ்வில் ஒரு கட்டமைவாகக் காணப்படுகிறது.)

புதிய தலைமுறையினரின் எழுச்சியை ஒரு முக்கியமானதாக இங்கு குறிப்பிடலாம். பல்கலைக்கழகங்களில் கல்வியைப் பெற்று பட்டதாரி ஆன இளைஞர் கூட்டத்தில் பெரும்பாலானோர் நகர்ப்புறங்களிலே ஆசிரியர் தொழில்புரிகின்றனர். தொழிலாளர் மத்தியிலிருந்தும் மத்தியதர வர்க்கத்திலிருந்தும் தோன்றிய இவர்கள் தனக்கென ஒரு நாகரிக அம்சத்தைக் கொண்டுள்ளனர். (இதனை விட பட்டதாரிகள் அல்லாதோர் அதிகமாக ஆசிரியர் தொழிலில் ஈடுபாடு உள்ளவர்களாக காணப்படுகின்றனர். புதியதாக ஒரு ஆசிரியர் வகுப்பினர் உருவாகி வருவதை நடைமுறை ரீதியாக காணக் கூடியதாக இருக்கிறது.) இவ்வாசிரியர்களில் பெரும்பாலானோர் தோட்டத்தொழிலாளர் மத்தியில் வாழ்கின்றனர். இவர்கள் தோட்டத் தொழிலாளர் கடைப்பிடிக்கும் சமூக நாகரீக பழக்கங்களிலிருந்து ஓரளவு வேறுபட்டே காணப்படுகின்றனர். இச்சமூக சூழலில் ஆசிரியர்களைப்பற்றி தொழிலாளர் விளங்கிக் கொண்ட போதிலும் இவர்களுக்கிடையிலான வேறுபாடு அதிகரித்தே காணப்படுகின்றது. இவ்வாசிரியர் வகுப்புக்களைவிட வேறு வகுப்பினரும் காணப்படுகின்றனர். பத்திரிகைத்துறையிலும் மலையகத்தைத் தவிர வேறு இடங்களில் வேலை செய்பவராகவும் காணப்படுகின்றனர்.

அண்மைக் காலங்களில் இலங்கை அரசியலில் சமூக பொருளாதார அமைப்புகளில் இவர்களின் முக்கியத்துவம் அதிகரித்துக் காணப்படுவதால் அதற்கேற்றவாறு ஒரு மாற்று நிகழ்வை அவதானிக்க முடிகிறது. தோட்டப்பகுதிகளிலிருந்து தொழிலாளர்கள் இளைஞர்கள் கொழும்பு போன்ற நகரங்களில் வேலை செய்கின்றனர். தங்களது குடியிருப்புகளையும் இவர்கள் இவ்வாறான நகர்ப்புறங்களில் அமைத்துக்கொள்கின்றனர். இவர்களின் நாகரீக பழக்க வழக்கங்கள் மலையகத்திலிருந்து மாறுபட்டதாகக் காட்டிக் கொள்கின்றனர். இதனைவிட விவசாயம் செய்வோர், நகர்ப்புறங்களில் கடைகள் வைத்திருப்போர் போன்ற ஒரு செல்வந்த வகுப்பினரும் காணப்படுகின்றனர். (ஒரு முறையாக நாம் தொகுத்து நோக்கும்போது சாதி அமைப்பு முறைகள், குலமரபு முறைகள் போன்றவை ஓரளவு மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பினும் தொழிற்சங்க கட்டமைப்பிலிருந்து முற்றாக மாறுபடவில்லை. இதே போல வேலை அமைப்புமுறையும் புதிதாக உருவாகிவரும் படித்த மத்தியதர வர்க்கங்கள் போன்றன இச்சமூக அமைப்பில் பிரதான அம்சமாக் உள்ளது. ஆனால் பெரும்பாலானவர்கள் மலையகப் பிரதேசத்தில் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர்.)

தேசிய சிறுபான்மை தமிழ் இனத்தோடு இணைவதற்கு இச்சமூக அமைப்பு மாற்றத்திற்குள்ளாவது அவசியம். இச்சமூக கட்டமைப்பில் வருவோர் ஒரு பொதுப் பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டு தீர்வு காண வேண்டியது அவசியமாகும். அதற்குப் பிறகு சமூக அடிமட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு முறைகளை ஆராயலாம்

# அருமை அம்மா!

ச. பன்னீர்ச்செல்வம்

அம்மா.....
ஆசையோடு ஈன்றெடுத்த
அம்மா!
வா நாம்
தொலைந்து
போவோம்

வறுமைபட்டு
வறுமைபட்டு
வதைபடுவதை விட
அதோ அந்த
புதைகுழியில்
புதைந்து போவோம்

அம்மா.....
கண்ணே என்று
கட்டிய விரல்களோடு-நான்
கல்லறைக்குப் போகிறேன்

வா நாம்
தொலைந்து போவோம்

நீ ஏறிய
ஏழாம் நம்பர்
மலைகளோ -உன்
ஏக்கத்தைச் சொல்லும்
ஆறாம் நம்பர்
மலைகளோ -உன்
அவஸ்தையைச்
சொல்லும்

அம்மா.....
உன்
அழகிய கரம்
தேயிலைக் கறையால்
சேதமாக்கப்பட்டது

உன்
எழில் முகம்
அசிங்கமானது

அந்த
பனித்துளிகளை
எதிர்த்து—உன்
பாதம் பணியாத
போது
பித்த வெடிப்பென்ற
புற்றும் உருவானது

நீ
மனக் கண்ணெங்கும்
வெளிச்சத்தை
கணக்கிட்டாய்
இன்னும்
இருளாக இருப்பதால்
ஏமாந்து போனாய்

அம்மா.....
அந்தப் பெண்கள்
காரில் பயணிக்கும் போது
உன்
கால்களுக்கு
செருப்பு கூட
இல்லையே!

பட்டாக பலர்
உடுத்தையில்—
உனக்கு அதை
தொட்டுப் பார்க்கக் கூட
எட்டவில்லை

அந்த கந்தையை
மாற்றி
கசக்க நினைத்தாய்-
மாற்றி கட்ட
மறுதுணி யின்றி
தவித்தாய்!

இதோ இந்த
மைமையனும்
உன்னைப் போலவே
ஓராயிரம் கனவுகளை
மனதிலேச்
சுமந்து
உன்னைப் போலவே
ஒடுங்கிப் போனான்

பிஞ்சு வயதிலே
கொஞ்சி கொஞ்சி
தாலாட்டி
வளர்த்த
அம்மா!

வா......
நாம்
தொலைந்தே போவோம்

வறுமைபட்டு
வறுமைபட்டு
வதைபடுவதை விட
அதோ அந்த
புதைகுழியில்.....

போராடி போராடி
தோற்றுப் போகையில்
எச்சங்களை
வளர்த்தப் பின்னே......
புதைந்து போவோம்

★

## கடைசிப் பக்கம்

# கசப்பான உண்மைகள்

''சங்கங்களுக்காக
செத்தது போதும்–இனி
எங்களுக்காய்
சாவோமென எழுதப்பட்ட
முதல் அத்தியாயம்
சிவனு லெட்சுமணன்''

கவிஞன் முரளிதரனின் நெஞ்சில் கனன்று பிறந்த கனல் வரிகள்.....

மண்ணுக்காக முதல் உயிர் பலி சிவனு லெட்சுமணன்

மலையகப் போராட்டங்களில் எத்தனையோ உயிர்ப்பலிகள் நடைபெற்றிருக்கலாம். ஆனால் மண்ணுக்காக நடைபெற்ற போராட்டத்தில் மறைந்த மாவீரன் சிவனு லெட்சுமணனே

மலையகத்தில் தேயிலை காணிகளை சுவீகரித்து சிங்கள கிராம மக்களை அரசாங்கம் குடியேற்ற எடுத்த நடவடிக்கையை தொழிலாளர்கள் தொழிற்சங்க வேறுபாடுகளை மறந்து போராடினர்... அனைத்து தொழிலாளர்களும் வர்க்க ரீதியில் ஒன்றுபட்டு போராடியதால் வெற்றிபெற்றார்கள்

இந்த வீரமிகு போராட்டத்தில் பொலிஸாரின் துப்பாக்கி குண்டுக்கு இரையானவர் சிவனு லெட்சுமணன்

சிவனு லட்சுமணன் இறந்தபொழுது இவரது உடலுக்கு சொந்தம் கொண்டாடி ஒரிரு தொழிற்சங்கங்கள் நீலிக்கண்ணீர் வடித்தன.

இந்த தியாகியின் வீரமரணத்தை தங்கள் தேர்தல் வெற்றிக்குப் பயன் படுத்திக் கொண்டதை அனைவரும் அறிவர்.

(அமைச்சர் தொண்டமான், முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக ஆகிய இருவரும் தங்களின் தேர்தல் வெற்றிக்கு இறந்துபோனவரின் தியாகத்தைப் பயன்படுத்திக்கொண்டார்கள்.)

சிவனு லெட்சுமணனுக்கு சிலை வைப்பதாக தேர்தலில் முழக்கம் செய்தார்கள்

ஆனால் அதன் பிறகு.....

பேச்சில்லை..மூச்சில்லை.

சிவனு லெட்சுமணன் மறைந்து 16 ஆண்டுகள் ஆகிவிட்டன.

எந்த ஒரு தொழிற்சங்கமாவது இவரை நினைத்துப் பார்க்கிறதா?

சிவனு லெட்சுமணன் பெயரைப் பாவித்து அரசியல் ஆதாயம் தேடிக்கொண்டவர்கள் கூட அவனை மறந்துவிட்டார்கள்.

தலைவர்களையும் தியாகிகளையும் மறந்த ஒரு சமூகம் இருக்கிறதென்றால் அது மலையக சமூகம்தான்

ஆனால், காலம் மாறும், அனைத்தும் மாறும் என்பது போல, மலையக சமூகத்தில் இளைய தலைமுறையினரிடையே ஓர் விழிப்புணர்வு தோன்றிவருகிறது.

அதன் வெளிப்பாடுதான்... தியாகி சிவனு லெட்சுமணன் புதைக்கப்பட்ட இடத்தில் அவனுக்கு ஓர் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. அதனைச்செய்த துடிப்புமிக்க இளைஞர்களுக்கு நாம் நன்றி கூறவேண்டும்

மலையகத் தொழிலாளர்களின் சந்தாப்பணத்தில் கார்கும் டி. வியுமாக வாழும் தொழிற்சங்கவாதிகள் தொழிற்சங்க போராட்டங்களில் தனது இன்னுயிரை தத்தம் செய்த தியாகிகளை நினைத்துப் பார்க்க வேண்டும்

**அந்தனி ஜீவா**

★

கண்டி தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகத்திற்காக கொழும்பு லங்கா வெளியீட்டகம் அச்சிட்டது

# 'குன்றின் குரல்'

சஞ்சிகை உங்களைத் தேடி வரவேண்டுமா?

## இன்றே சந்தாதாரர் ஆகுங்கள்

தனிப்பிரதி ரூபாய் **10/-**
ஆண்டு சந்தா ரூபாய் **40/-**

ஓராண்டுக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

காசோலை, மணி ஓடர், போஸ்டர் ஓடர் என்பனவற்றை ''Coordinating Secretariat for Plantation Areas என்ற பெயரில் ''குன்றின் குரல்'' இல: 30, புஸ்பதான மாவத்தை, கண்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**KUNRIN KURAL**

30, PUSHPADANA MAWATHA,
KANDY.


http://www.thamizham.net